# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 – 26490183

*11/29, திருமால் நகர் விரிவாக்கம்* II,
*8-வது குறுக்குத் தெரு, பூந்தமல்லி,*
*சென்னை* – 600 056.

## தாடி மற்றும் மீசை

1. தேவனுடைய சித்தத்தினாலே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்த வான்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்துக்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான் என்று மல்கியா தீர்க்கதரிசி உரைத்த தீர்க்கதரிசனம் (மல். 4:5,6) நிறைவேறத்தக்கதாக எலியாவின் ஆவியும், பலமும் உடையவனாக யோவான் ஸ்நானன் முதலாம் நூற்றாண்டில் தோன்றி பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்குத் திருப்பினான். (லூக். 1:17)

3. கடந்த இருபதாவது நூற்றாண்டில் எலியாவின் ஆவியும், பலமும் உடையவனான வில்லியம் மாரியன் பிரன்காம் தோன்றி, பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கு திருப்பும்படி தேவனிடத்திலிருந்து ஒரு செய்தியைக் கொண்டு வந்தார். அந்த செய்தி உள்ளும் புறமும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்துக்குள் பரமரகசியமாக அடங்கியிருந்தது. ஆட்டுக்குட்டியானவரால் முத்திரைகள் உடைக்கப்பட்டது. (வெளி.5:1, 6:1) ஆனாலும் அது இதுவரை இரகசியமாகவே இருந்து வந்தது. இந்த இரகசியங்கள் வில்லியம் மாரியன் பிரன்காம் ஊழியத்தில் வெளிப்படுத்தப்பட்டன. அது அவருடைய மனுஷகுமாரனுடைய ஊழியமாக இருந்தது. மனுஷகுமாரன் அவரில் தம்மை வெளிப்படுத்தினார். ஏழு முத்திரைகள் கொண்டு வந்த செய்தி, இந்த கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபை காலத்துக்குரிய செய்தியாக இருந்து, இந்த காலத்தில் தேவனால் முன்குறிக்கப்பட்ட மக்களை கர்த்தருடைய வருகைக்கென்று ஆயத்தப்படுத்தி வருகிறது. தலைக்கல் வருகைக்கு கிறிஸ்துவின் சரீரத்தை ஆயத்தப்படுத்தி வருகிறது. தேவனுக்கு துதியுண்டாவதாக. ஏழு முத்திரைகளின் இரகசியம் லவோதிக்கேயா சபைக்குரிய செய்தியின் முடிவாக இருக்கிறது. இனி ஒரு செய்தி கிடையாது. ஒரு செய்தியாளனும் இல்லை. இனி எடுத்துக் கொள்ளப்படுதலை விட்டு நிகழ வேண்டிய சம்பவங்கள் எதுவும் இல்லை. உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? உங்கள் பேரில் தேவனுக்கு குறை உண்டு. உங்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயில்லை. முடிவு காலத்தில் உங்களுக்கு எச்சரிப்புண்டாக்கும்படி இதை எழுதுகிறேன்.

4. இப்பொழுது இந்த செய்தியினால் தங்களை ஆயத்தப்படுத்தி வருகிறோம் எனக்கூறும் ஒருகூட்டம் ஜனங்கள் உண்டு. இவர்கள் மத்தியில் செய்தியை விசுவாசிக்கும் உண்மையும் உத்தமுமான விசுவாசிகள் உண்டு. அவர்களுடைய கொள்கைக்கும், கோட்பாடுகளுக்கும், எதிரான காரியங்கள் வரும்பொழுது, இதை யார் கேட்பார்கள் என்று பின்வாங்கும் அவிசுவாசிகளும் உண்டு. செய்தியை முற்றிலும் விசுவாசிப்பது போல் நடித்து, செய்திக்கு விரோதமாக செயல்படும் பாவனை விசுவாசிகளும் உண்டு. இந்த மூவகை விசுவாசிகளில் யார் யார் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் என்று அறிவது சற்று சிரமம் தான். ஆனாலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட உத்தமமான விசுவாசிகள் இவர்கள் யார் என அறிந்து கொள்வார்கள். ஏனென்றால் இவர்கள் தேவனுடைய வித்துக்கள். தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாவர். இவர்களை ஒருவரும் வஞ்சிக்க முடியாது. இவர்கள் தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்துக்குரிய செய்தியையும், சார்ந்து ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியில் கடந்து வரும் மக்களாக காணப்படுகிறார்கள். இவர்கள் தான் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள், அவருடைய மணவாட்டி.

5. இக்காலத்துக்குரிய செய்தி மக்கள் மத்தியில் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் காணப்படுவதால், பரிசுத்த ஆவியும், சாத்தானுடைய ஆவியும் கிரியை செய்கிறது. இதனால் இவர்கள் மத்தியில் போதனைகளில், உபதேசங்களில் குழப்பங்கள் காணப்பட்டு, நாளுக்குநாள் அவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதுவரை காணப்பட்ட குழப்பங்கள் போதாது என, சாத்தான் மீண்டும் வேற்றுமையான உபதேசங்களைக் கொண்டு வந்து, ஜனங்கள் மத்தியில் காணப்படுகிற சிறிதளவு சகோதர சிநேகத்தையும், ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், ஒருமனத்தையும் சீர்குலைத்து வருகிறான். ஆனால் அவனால் கிறிஸ்துவின் சரீரத்தில் குழப்பத்தைக் கொண்டு வர முடியாது. நிச்சயமாக முடியாது.

6. பொதுவாக சபைகளில் போதனைகளை, உபதேசங்களை கொண்டு ஏற்படும் குழப்பங்களுக்கு அதன் பாஸ்டர்களே முக்கிய காரணம். தமிழ் நாட்டை பொறுத்த அளவில் குழப்பங்களை கொண்டு வரும் பெரிய புள்ளிகள், குழப்ப வாதிகள் வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல், பெரவலூர் பெரியவர் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், சூளைமேடு பாஸ்டர் ஜான் ஐசக், பல்லாவரம் பாஸ்டர் சாமுவேல் தங்கமணி. பொதுவாக சபையில் குழப்பங்கள் ஏற்படுவதற்கு கள்ள கபடமுள்ள வேலையாட்களே காரணம். கர்த்தருக்குரிய தசமபாகத்திற்காகவும், சபைக்கடுத்த காணிக்கைகளுக்காகவும் ஊழியம் செய்கிற பெருவயிற்று சோம்பேறிகளே காரணம். தங்களைத் தாங்களே பாஸ்டர்களாக்கி கொண்டவர்களுமே காரணம். இந்நாட்களில் பாஸ்டர் ஜான் ஐசக் தன்னை சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டார் என அறிந்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

7. சத்தியம் என்றால் என்ன? அது எங்கே கிடைக்கும்? அதன் விலை என்ன? என்று கேட்க கூடிய கொடிதான வஞ்சிப்பின் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆம் பிரியமானவர்களே, இது தேவனுடைய வார்த்தையை

கேட்கக் கூடாத பஞ்சமான நாட்களாக இருக்கிறது. எங்கும் போலிகள் நிறைந்துள்ளன. அந்த போலிகளால் எங்கும் குழப்பம், குழப்பங்கள். ஆனாலும் மாறுபாடான உபதேசங்கள் சபைக்குள் நுழையும் போது, தேவனுடைய வித்து, அதை தேவனுடைய வார்த்தை மற்றும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டு அவைகளை ஆராய்ந்து பார்த்து, அவைகள் தவறு என அறிந்து அதை நிராகரிக்கின்றன. ஆனால் சர்ப்பத்தின் வித்து அதை ஏற்றுக் கொள்ளுகிறது. அதை ஆதரிக்கிறது. நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம்– இவர்கள் யாராக இருக்க முடியும்? நிச்சயமாக நூற்றுக்கு நூறு சதவீதம் பிசாசே. சகோ. பிரன்காம் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில், யோவானுக்கு வெளிப்படுத்த இயேசு கிறிஸ்துவினால் அனுப்பப்பட்ட தூதன் என்று கூறுவதும் யாராக இருக்க முடியும்? இதுவும் பிசாசே. இனி பரிசுத்த வேதாகமம் தேவையில்லை, இக்காலத்துக்குரிய செய்தி ஒன்றே போதும், அதாவது வேதாகமம் இரகசியங்களைக் கொண்டதாக இருக்கிறது. இக்காலத்துக்குரிய செய்தி தேவரகசியங்களை வெளிப்படுத்திக் காட்டும் ஒன்றாக இருக்கிறது. இரகசியங்களை வெளிப்படுத்திக் காட்டும் புத்தகம் நம் கரங்களில் இருக்கும் போது, இரகசியங்களைக் கொண்ட புத்தகம் ஏன் என்பது யார்? இதுவும் சந்தேகமில்லாமல் அதே பிசாசு தான். இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள மக்கள் மத்தியில் அதன் போதகர்களில் பெரும்பாலானோர் பிசாசுகளே. பிசாசுகளை அடையாளம் காட்டிக் கொண்டு தான் நான் இருக்கிறேன். என்னிடத்தில் கேள்விப்பட்டதை விசுவாசிப்பவர்கள் யார்?

8. இந்நாட்களில் தேவனுடைய சபையில் உள்ள ஆண்கள் தாடி, மீசை வைத்துக் கொள்ளலாமா? அல்லது அவற்றை சவரம் செய்து கொண்டு, எப்பொழுதும் முகம் பளபளப்பாக காணப்படவேண்டுமா? என்ற பிரச்சனை எழுந்துள்ளது. தாடி, மீசை சவரம் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் ஆண்கள் முகம் எப்பொழுதும் பளபளப்பாக (Clear Countenance Or Clean Shaved) காணப்படவேண்டும். இது தீர்க்கதரிசியாகிய பிரன்காமின் ஆலோசனை. ஆதலால் நாம் இதை கடைப்பிடித்தாக வேண்டும் என ஒரு கூட்டத்தார் உபதேசித்து, அவர்கள் கடைபிடித்து வருகிறார்கள். இதுவும் பிசாசின் கூட்டமே. அதில் சந்தேகமே இல்லை.

9. ஆனாலும் இதை இவர்கள் கட்டாயமாக யார் மீதும் திணிப்பது இல்லையாம். ஒருவன் தாடி, மீசை வைத்துக் கொள்வது அல்லது அதை சவரம் செய்வது அல்லது அதை கத்தரித்துக் கொள்வது அவரவரது விருப்பம் அல்லது விருப்பமில்லாமை. இதில் கட்டாயம் எதுவும் கிடையாது. ஆனால் இக்காலத்துக்குரிய செய்தியை உண்மையும் உத்தமுமாக கடைப்பிடிக்கும் நாங்கள் சவரம் செய்து கொள்கிறோம் என்கிறார்கள். இவர்கள் மாய்மாலம் பண்ணுகிறார்கள். ஒரு உறுதியில்லாத உபதேசத்தைக் கொண்டுவந்து மக்களை மழுப்புகிறார்கள், வஞ்சிக்கிறார்கள். அதாவது தாடி, மீசையை சவரம் செய்து கொள்ளும் இவர்கள் தான் இக்காலத்திற்குரிய செய்திக்கு உண்மையும் உத்தமுமாய் காணப்படுகிறார்கள் என்று கூறும்பொழுது, சரவம் செய்து கொள்ளாதவர்கள் உண்மையான விசுவாசிகள் அல்ல என்று மறைமுகமாக பறைசாற்றுகிறார்கள். இந்த செய்தித்தொகுப்பை நான் முடிக்கும் வேளையில் ஒரு ஆவிக்குரிய சகோதரர் என்னை சந்தித்தார். அப்பொழுது அவர் சமீபகாலத்தில் இந்த குரூப் பல்லாவரம் இனாயத் மஹாலில் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அப்பொழுது இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள ஆண்கள் தங்கள் தாடி, மீசையை சவரம் செய்து எப்பொழுதும் அவர்கள் முகம் பளபளப்பாகவே காணப்படவேண்டும் என்று உபதேசித்தார்கள் என்றார். இவர்கள் வெஸ்ட் இண்டீஸ் – ல் உள்ள டிரினிட்டாட் என்ற இடத்திலிருந்து ஊழியம் செய்யும் சகோ. டால்டன் புரூஸ் (Dalton Bruce. Trinidad, West Indies) என்பவருக்கு வால் பிடிக்கும் ஒரு கூட்டம். இந்த கூட்டத்தையும் விட்டு வெளியே வாருங்கள். இவர்களும் உங்களை மரணத்துக்குத்தான் வழிநடத்த முடியும்.

10. நமது தமிழ்நாட்டில் பொதுவாக எந்த ஒரு வெளிநாட்டு ஊழியக்காரர்களுக்கு வால் பிடிக்கும் கூட்டம் ஒன்று இருக்குமானால் அத்துடன் ஐக்கியம் கொள்ளாதீர்கள். நமது ஊழியர்கள் அவர்கள் செய்யும் பணஉதவிக்காகவே மாரடிப்பவர்களாயிருக்கிறார்கள். அவர்களது பண ஆசை உங்களது ஆவிக்குரிய வாழ்க்கையை மோசம் போக்கும். உங்கள் விசுவாசத்தை சீர்குலைக்கும். நீங்கள் அவர்களால் உங்கள் பந்தயப்பொருளை இழந்து போகாதீர்கள். ஆதலால் இந்த சகோ. டால்டன் புரூஸை பின்பற்றும் சகோ. டேனியேல் ஆசிர்வாதம் கூட்டத்தாரையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள தமிழர்கள் மத்தியில் இந்த செய்தித்தொகுப்பு பரவலாக சென்று கொண்டிருக்கிறது. ஆதலால் நீங்கள் நியாத்தீர்ப்பு நாளில் உங்களை எந்த ஊழியக்காரனும் எச்சரிக்கவில்லை எனக் கூறமுடியாது. உங்கள் இரத்தப்பழிக்கு நான் நீங்கலாயிருப்பேன்.

11. உபதேசம் என்று ஒன்று வரும்பொழுது, இதைச் செய் அல்லது இதைச் செய்யாதே என்று இருக்க வேண்டும். கடைபிடிக்கலாம், கடைபிடிக்காமலும் இருக்கலாம் ஒரு உறுதியற்ற உபதேசம் சாத்தானுடையதே. ஒரு ஊழியக்காரன் தன் ஜனங்களைப் பார்த்து இதை கடைப்பிடியுங்கள், கடைப்பிடிக்காமல் இருப்பதும் உங்கள் விருப்பம், ஆனால் நானும் என்னைச் சார்ந்துள்ளவர்களும் கடைப்பிடிக்கிறோம் என்பானேயாகில் அவனும் ஒரு கள்ளகபடமுள்ள வேலையாளே. தேவனுடைய மனுஷன் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு, இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டு, இதைச் செய், இதைச் செய்யாதீர்கள் என்று ஜனங்களை எச்சரிக்கை செய்கிற ஒரு ஊழியக்காரனாக இருப்பான்.

12. இப்பொழுது நாம் இங்கு ஒருவர் தாடி, மீசை வைத்துக் கொள்ளலாமா அல்லது வைத்துக் கொள்ளக் கூடாதா என்பது குறித்து வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறது என்று தியானிப்போம். அதைக் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வருவோம். எந்த ஒரு உபதேசத்திற்கும், போதனைக்கும் தேவனுடைய வார்த்தையே ஆதாரம். அதை விட்டு நாம் வலது, இடது புறம் சாயக் கூடாது. தேவனுடைய வார்த்தையில் போதுமான ஆதாரம் கிடைக்காவிடில் அது குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது என்றும் நாம் பார்க்கலாம். வேத வாக்கியங்களில் போதுமான ஆதாரங்கள் இருக்கும்போது இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து ஆதாரங்கள் கொடுக்க வேண்டிய தேவையில்லை.

13. சங்கீதக்காரன் உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்கிறார். (சங்.119;105) ஆம், தேவனுடைய வார்த்தை மற்றும் இக்காலத்துக்குரிய செய்தி நம்முடைய பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது. அது நம்முடைய பாதையை பிரகாசிப்பிக்கிறது. ஆதலால் நாம் அந்தகாரத்தில் நடப்பது இல்லை. நாம் வெளிச்சத்தில் நடப்பதால் இடறிப் போவது இல்லை. தவறிப் போவது இல்லை. ஆதலால் இந்த தாடி,

மீசை பிரச்சனைக்கு நாம் தேவனுடைய வார்த்தையை வெளிச்சமாகக் கொண்டு அதில் நடப்போமானால் இடறிப் போவது இல்லை.

**14. இப்பொழுது கவனியுங்கள். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். (ஆதி. 1:27) தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார். (பிர.7:29) இந்த மனுஷனுடைய சரீரம் ஒரே அவயவமாயிராமல், அநேக அவயவங்களாயிருக்கிறது. (1 கொரி. 12:14) தேவன் தமது சித்தத்தின்படி அவயவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (1கொரி. 12:18) ஆம், ஒவ்வொரு அவயவத்திற்கும் அதற்கான பிரத்தியேகமான இடமுண்டு. ஒவ்வொரு அவயவமும் அதற்கான இடத்தில் ஒரு காரணத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. ஒரு நோக்கம் இல்லாமல் எந்த ஒரு அவயவமும் சரீரத்தில் வைக்கப்படவில்லை. விரல்களில் உள்ள நகங்களுக்கு ஒரு நோக்கமும், பணியும் உண்டு. மூக்கினுள் உள்ள மயிர்களுக்கும் கூட ஒரு நோக்கமும், ஒரு பணியும் உண்டு. வயிற்றுக்கும் ஒரு நோக்கமும், ஒரு பணியும் உண்டு. ஆம், தேவன் உண்டாக்கின ஒவ்வொன்றிற்கும் ஒரு நோக்கம் உண்டு, ஒரு பணி உண்டு. அவ்வண்ணமாகவே தேவன் செய்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு நோக்கம் உண்டு. ஒரு நோக்கம் இல்லாமல் தேவன் எந்த ஒரு காரியத்தையும் செய்வதில்லை. சாத்தான் எனக்கு மரணத்தைக் கொண்டு வர முயற்சித்தான். ஆனால் கர்த்தர் என்னை அவனுடைய சித்தத்திற்கு ஒப்புகொடுக்காமல், அவனுடைய முயற்சிகளை முறியடித்து, எனக்கு ஜீவனை கொடுத்து, ஆயுசு காலத்தைக் கூட்டிக் கொடுத்துள்ளாராயில் அதில் ஒரு நோக்கம் உண்டு. நான் அந்த நோக்கத்தை அறிந்து அதை நிறைவேற்றவேண்டியவனாயிருக்கிறேன். நான் உங்களை வேத வாக்கியங்களைக் கொண்டு, இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டு சத்தியத்துக்குள் வழிநடத்துவதன் மூலம் அந்த நோக்கத்தை நிறைவேற்றி வருகிறேன். கர்த்தருடைய வல்லமையுள்ள நாமத்திற்கு ஸ்தோத்திரம்.**

**15. ஆம் பிரியமானவர்களே, அவ்வண்ணமாகவே தேவன் மனுஷனுடைய முகத்தில் தாடி, மீசை வைத்திருப்பாராகில் அதற்கும் ஒரு காரணம் இருக்கும். அதற்கும் ஒரு நோக்கம் மற்றும் பணி இருக்கும். தேவையற்ற ஒன்றை அவர் நம்முடைய சரீரத்தில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. தாடிக்கும், மீசைக்கும் பணிகள் உண்டு. நாம் வெளிப்படையாக பார்க்கும்போது தாடி, மீசை ஆண் பெண்களுக்கு உள்ள வித்தியாசத்தை காட்டுகிற ஒன்றாக இருக்கிறது. ஒரு ஆணுக்கு தாடி, மீசை முளைப்பது போன்று, ஒரு பெண்ணுக்கு முளைப்பது இல்லை. தாடி, மீசை கொண்டு நாம் ஒரு ஆண் பெண்ணுக்கு உள்ள வித்தியாசத்தை காண முடிகிறது. தாடி, மீசை ஒரு மனுஷனுடைய சிருஷ்டிப்பின் சுபாவத்தில் உள்ள ஒன்று. சுபாவமே ஒரு ஆண் தாடி, மீசை உடையவன் என்று போதிக்கிறது. பாருங்கள் புருஷன் தலைமயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனம். (1கொரி 11:14) அதே வேளையில் ஒரு ஸ்திரீ தன் தலைமயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமை. (1கொரி 11:15) இதை சுபாவமே உங்களுக்கு போதிக்கிறதில்லையா என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறார்.**

**16.** ஆம், பிரியமானவர்களே தாடி, மீசை, ஒரு ஆணுக்குரியதென்று சுபாவமே உங்களுக்கு போதிக்கிறது. தலைமயிர் ஒரு பெண்ணுக்கு தலைமுக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிது. (1கொரி. 11:15) அவ்வாறாகவே தாடி, மீசை, ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள வித்தியாசத்தை வெளிப்புறமாக எடுத்துக் காட்டுகிறது. அதோடு மட்டுமல்ல தாடி, மீசை ஒரு ஆணுக்கு அழகுக்காகவும் உள்ளது. பொதுவாக நம்முடைய சமுதாயத்தில் தாடி, மீசை வைக்காத, அதை சவரம் பண்ணிக்கொண்ட ஒரு ஆணை பார்த்து: என்னையா பெண்பிள்ளை மாதிரி இருக்க, மீசை வைத்துக் கொள்ளக் கூடாதா, அதை ஏன் சவரம் பண்ணிக் கொண்டாய் என்பார்கள். மீசை உடையவனைப் பார்த்து: நீதாண்டா ஆண்பிள்ளை என்பார்கள். **ஆக தாடி, மீசை, தலைமயிர் இவைகள் யாவும் ஆண், பெண்களுக்கடுத்த தேவனுடைய ஒரு பிரமாணமாக இருக்கிறது.**

17. **பழைய மற்றும் புதிய ஏற்பாடு காலங்களில் ஆண்கள் தாடி, மீசை உடையவர்களாகவே இருந்தனர். வேதாகமத்தில் மீசை என்று தனியாக எங்கும் கூறப்படவில்லை. ஆதலால் மீசை என்ற ஒன்று கிடையாது எனக் கூறக்கூடாது. மீசை, தாடியுடன் இணைந்த ஒன்றாக கருதப்பட்டது. தாடி, மீசை ஒன்றாக இணைந்திருக்கிறது.** நம் மத்தியிலும் சில ஆண்கள் தாடி மற்றும் மீசை இரண்டையும் ஒன்றாக இணைத்து வளர்க்கின்றனர். பண்டைகாலத்தில் அப்படி இரண்டையும் ஒன்றாக சேர்த்து வளர்ப்பது தான் பழக்கத்தில் இருந்தது. நம் மத்தியில் இந்நாட்களில் கூட முஸ்லீம் சமுதாய ஆண்கள் இரண்டையும் சேர்த்து ஒன்றாக வளர்க்கிறார்கள். இவர்கள் பண்டைய முறையைத்தான் பின்பற்றி வருகிறார்கள். ஆனால் மனுஷன் எப்பொழுது தன் தாடியையும், மீசையையும் சவரம் பண்ண தொடங்கினான் என்று என்னால் சரித்திரத்தில் தேடி ஆராய்ந்து எழுத முடியவில்லை.

18. நாம் 2சாமு. 10அதி. மற்றும் 1நாளா. 19அதி. தியானிக்கும் போது தாடிக்குரிய முக்கியத்துவம் தெரிகிறது. தாவீது, அம்மோன் புத்திரரின் ராஜா நாகாஸ் மரித்துப் போனபின், அவன் குமாரன் ஆனூனுக்கு ஆறுதல் சொல்லத் தன் ஊழியக்காரர்களில் சிலரை அனுப்பினான். ஆனால் அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தாவீதின் ஊழியக்காரர்கள் பட்டணத்தை ஆராய்ந்து உளவுப் பார்க்க வந்துள்ளார்கள் என ஆனூனிடம் கூற, அவன் தாவீதின் ஊழியக்காரர்களைப் பிடித்து அவர்களுடைய ஒரு பக்கத்து தாடியை சிரைத்து அனுப்புகிறான். அந்த மனுஷர்கள் மிகவும் வெட்கப்பட்டார்கள். இதனால் அவர்கள் தாவீதினிடத்தில் வராமல், தங்கள் தாடி வளருமட்டும் எரிகோவில் இருந்தனர். இந்த சம்பவத்தை நாம் தியானிக்குபோது ஒரு பக்கம் தாடி சிரைக்கப்பட்டதால், மறுபக்கத்து தாடியையும் சிரைத்துக் கொண்டு அவர்கள் தாவீதினிடம் திரும்பச் செல்லவில்லை. **ஒரு ஆண் தாடி இல்லாமல் இருப்பதை அவர்கள் மிகவும் வெட்கமாகக் (Grievous insult) கருதினார்கள்.** ஆதலால் சிரைக்கப்பட்ட பக்கத்து தாடி வளருமட்டும் காத்திருந்து, பின் சென்றனர்.

19. மேலும் ஏசாயா தாவீதின் வம்சத்தாரை நோக்கி ஆண்டவர் கூலிக்கு வாங்கின சவரகன் கத்தியினால், அதாவது, அசீரியா ராஜாவினால், உங்கள் தலைமயிரையும், கால் மயிரையும் சிரைபித்து, தாடியையும் வாங்கிப் போடுவிப்பார் என்றான். (ஏசா.7:20) இது என்ன? தாடியை சிரைத்து உன்னை அவமானப் படுத்துவேன், அது உனக்கு வெட்கமாயிருக்கும் என்பது தானே. ஆம் தாடியை சிரைப்பது அந்நாட்களில் வெட்கமாக கருதப்பட்டது. **மேலும் தாடியை சிரைப்பது அவமானத்துக்கும், உமிழ்நீருக்கும் முகத்தை ஒப்புக் கொடுப்பதற்கும் சமானம் என்பதை ஏசா.50:6–ல் காண்கிறோம்.** நீங்கள் மேலும் ஏசா.15:1–2 வசனங்களை தியானித்தால் தாடியை கத்தரித்தல் மோவாபின் பாரம், அதாவது மோவாப் மேல் விழுந்த நியாயத்தீர்ப்பு (Judgement) என கூறப்பட்டுள்ளது. **ஆதலால் தாடியை சிரைப்பது அவமானம் என்று பொருள்படுவதாக நாம் வேதாகமத்தில் காண்கிறோம்.**

20. 2சாமு.19:24ஐ தியானிக்கும் போது மேவிபோசேத் தன் தாடியை சவரம் பண்ணவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதை ஆங்கிலத்தில் trimmed எனக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் அது கத்தரிக்கவில்லை பொருள்படும். இதிலிருந்து மேவிபோசேத் தன் தாடியை கத்தரித்து வந்தான் என தெரிகிறது. தாவீது அப்சலோமுக்கு பயந்து தன் நாட்டை விட்டு வெளியேறினதிலிருந்து மீண்டும் திரும்பி வரும் வரை மேவிபோசேத் தன் தாடியை கத்தரிக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் அவன் தன் தாடியை முன் கத்தரித்து வந்தான், பின் கத்தரிக்காமல் இருந்தான் என்று தெரிகிறது. **ஆக தாடியை கத்தரித்தல் முன்காலத்தில் பழக்கத்தில் இருந்தது. ஆனால் சவரம் செய்வது அல்ல.**

21. ஆனால் ஒருவர் தன் தாடியின் ஓரங்களை கத்தரிக்க கூடாது (Mar the corners of thy beard) என லேவி. 11:27, 19:27 கூறுகிறது. மேலும் தாடியின் ஓரங்களை சிரைத்துப் போடக் கூடாது (Shave off the corners of thy beard) என லேவி. 21:5 கூறுகிறது. **ஆக தாடியை பொறுத்த அளவில் சில பிரமாணங்கள் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறதாக தெரிகிறது.** இந்த பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது? மனுஷன் தன் தாடியை கத்தரித்துக் கொள்ளவோ அல்லது சிரைத்து போடவோ தொடங்கினதினால், அதை அவ்வாறு செய்யக்கூடாது என்று ஒரு பிரமாணம் எழுந்தது. **ஆக மனுஷன் தன் தாடியை கத்தரிக்க கூடாது, சிரைக்க கூடாது என்பதே தேவனுடைய பிரமாணமாக இருக்கிறது.**

22. எஸ்றா (எஸ்றா 9:3) எரேமியா (எரே. 41:5, 48:37) எசேக்கியேல் (எசே. 5:1, 24:17,22) தாவீது (1சாமு. 21:13) அமாசா (2சாமு. 20:9) தாடி உடையவர்களாகவே இருந்தனர். சுருக்கமாக சொல்லப்போனால் ஆதி முதல் கொண்டு ஆண்கள் தாடி உடையவர்களாகவே இருந்தனர். ஆனால் அவர்கள் எப்பொழுது அதை குறைக்க, சவரம் செய்ய ஆரம்பித்தனர் என்று என்னால் கூறமுடியவில்லை.

23. இயேசு கிறிஸ்துவின் சரீரம் தேவனால் ஆயத்தமாக்கப்பட்டது. (எபி 10:5) ஒரு ஆண், பெண் மாம்ச இச்சையினால் அது உண்டான சரீரமல்ல. ஆண் பெண் உறவு இல்லாமல் முற்றிலுமாக பரிசுத்த ஆவியினால் உண்டானது. இயேசு கிறிஸ்துவின் சரீரம் மரியாளிடத்தில் உற்பத்தியாக பரிசுத்த ஆவி அவள் மேல் வந்தது. உன்னதமானவருடைய பலம் அவள் மேல் நிழலிட்டது. அந்த குழந்தை பரிசுத்தமுள்ளதாக இருந்தது. ஆம், அந்த குழந்தைக்காக, இயேசு கிறிஸ்துவின் சரீரத்துக்காக மரியாள் யாதொரு புருஷனையும் அறியவில்லை. தனக்காக நியமிக்கப்பட்ட யோசேப்பையும் அவள் அறியவில்லை. (மத்.1:20, லூக். 1:34,35) ஆம், அநாதி தேவன், பிள்ளைகள் (நாம்) மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல (நம்மைப் போல) மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். (எபி. 2:14) மாம்ச சரீரத்தை பிள்ளைகள் இயேசுவுக்கு முன்னே பெற்றுக்கொண்டனர். ஏனென்றால் இயேசு தம்முடைய மாம்ச சரீரத்தை மரியாளின் வயிற்றில் தான் பெற்றுக் கொண்டார். ஆம், அவர் எல்லா விதத்திலும் தம்முடைய சகோதரர்களுக்கு (நமக்கு) ஒப்பாகவே இருந்தார். ஏன்? மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். மேலும் பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் (எபி. 2:14–17). பாருங்கள் அவரும் நம்மைப் போல் பல பாடுகளை கடந்து சென்றார். நம்மைப் போல் அவருக்கும் பசி இருந்தது. தாகம் இருந்தது. நம்மைப் போல் ஆடைகளை உடுத்தினார். நம்மைப் போல் தூங்கினார். நம்மைப் போல சோதனைகளையும் சகித்தார். ஆம், எல்லாவற்றிலும் அவர் நமக்கு ஒப்பாகவே இருந்தார்.

24. **இயேசுவுக்கு தாடி இருந்தது.** பாருங்கள் அவரைக் குறித்த வேதவாக்கியங்கள் இவ்வாறாக கூறுகிறது. அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரை பிடுங்குகிறவர்களுக்கு என் தாடையையும் ஒப்புக் கொடுத்தேன் என ஏசா. 50:6 கூறுகிறது. அனைத்து காரியங்களிலும் அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி அவர் நமக்கு மாதிரியை பின் வைத்துள்ளார். (1 பேது. 2:21) **மனுக்குலத்தில் ஆண் தாடி, மீசையுடைய சுபாவத்தினனாகவே சிருஷ்டிக்கப்பட்டான். அது அவனுடைய சுபாவங்களில் ஒன்றாகவே இருக்கிறது.**

**25. ஆக கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே! தாடி மற்றும் மீசை ஒரு புருஷனுக்குரிய பிரமாணமாக இருக்கிறது. அவன் அதை உடையவனாக இருக்க வேண்டும் என்று சுபாவமே அவனுக்கு போதிக்கிறது. ஆதலால் தான் இயேசுவும் அதை உடையவராகவே காணப்பட்டார். தேவன் காரணமின்றி மனுஷனை தாடியுடன் சிருஷ்டித்து ஒரு பாதகம் செய்து விட்டார் என்று நாம் கூறலாமா? தாடியையும், மீசையையும் ஆண்கள் சிரைக்க வேண்டும் என்பவர்கள் இதைத்தான் கூறுகிறார்கள். அப்படியானால் உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவரை நோக்கி: நீ ஏன் என்னை இப்படி உருவாக்கினாய் என்று சொல்லலாமா? ரோ. 9:20 சொல்லக்கூடாதே. ஆதலால் ஒரு ஆண் தாடி மீசையை சவரம் செய்து விட்டு பளபளப்பான முகத் தோற்றத்துடன் காணப்படவேண்டும் என்ற உபதேசம் பிசாசுக்கடுத்தது. அப்படிப்பட்ட உபதேசங்களுக்கு செவிகொடுக்காதீர்கள். பிசாசு, இந்நாட்களில் சகோ. பிரன்காம் பெயரை கூறி, கூறி மக்களை வஞ்சித்து வருகிறான். ஏமாற்றி வருகிறான். ஆதலால் எப்பொழுதும் பிரன்காம், பிரன்காம் எனக் கூறிக்கொண்டே காலத்தை வீணாக்கிக் கொண்டு வரும் நபர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்களை நம்பி மோசம் போகாதிருங்கள்.**

26. நம்முடைய கண்கள் காண திரு. லால்பகதூர் சாஸ்திரி, திரு. காமராஜ், திரு. அண்ணாதுரை போன்றவர்கள் நேர்மையாக நாட்டை ஆண்டு பிரசித்திப் பெற்றனர். ஆனால் இந்நாட்களில் இவர்கள் பெயரை கூறி, கூறி மக்களை ஏமாற்றி, நாட்டை கொள்ளையடித்து கோடீஸ்வரர்களாகி, மக்களைப் பார்த்து உங்களுக்கு மேற்கூறிய அரசியல் தலைவர்களை போன்ற சேவை செய்கிறோம் எனக் கூறி தங்கள் பிழைப்பை நடத்தும் இன்றைய தலைவர்கள் போல சபையிலும் சாத்தான் தேவனால் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் பெயரைக் கூறிக்கொண்டே மக்களை மோசம் போக்குகிறான். நீர்வளம், நிலவளம், கனிமவளம், கரிமவளம் நிறைந்த இந்தியாவில் மக்களுக்கு இன்றைய அவலநிலை ஏன்? அரசியல்வாதிகளுக்கு செவிகொடுப்பதினால் தான். சாத்தான் மக்களை ஏமாற்ற அநேக உபாய தந்திரங்களை தேடிக் கொண்டுள்ளான். (பிர. 7:29) அவனுடைய உபாய தந்திரங்களில் நாம் சிக்கக் கூடாது. நாம் இப்பிரபஞ்சத்திற்குரிய வேஷம் தரிக்கவும் கூடாது. (ரோ. 12:12)

27. ஒரு புருஷன் தாடி, மீசை வைக்ககூடாது போன்ற போதனைகள் சுய இஷ்டமான, மாயையான தாழ்மையே அன்றி அவைகள் மற்றொன்றிற்கும் பிரயோஜனமற்றதுமாய் இருக்கிறது. ஆதலால் வாருங்கள், தேவன்

ஆண்களுக்கென்று நியமித்த பிரமாணத்தில் ஆண்களாகிய நாம் நிலைத்து நிற்போம். வெளிநாட்டு எலும்புத்துண்டுகளுக்கு எதிர்த்து நிற்போம். சாத்தானை வீழ்த்துவோம்.

28. என்னுடைய போதனைக்கு வேதத்தில் போதுமான ஆதாரங்கள் இருப்பதால் நான் இக்காலத்துக்குரிய செய்தியில் ஆதாரங்கள் தேடவில்லை. தேவனுடைய வார்த்தையில் போதுமான ஆதாரங்கள் இல்லாவிட்டால் தான் ஒருவன் இக்காலத்துக்குரிய செய்தியில் ஆதாரங்கள் தேடவேண்டும். வேதத்தில் போதுமான ஆதாரங்கள் இருக்கும்பொழுது தீர்க்கதரிசி இது குறித்து என்ன சொல்லுகிறார் என ஒருவன் கேட்க கூடாது. **தீர்க்கதரிசி வேதத்தில் இல்லாத ஒரு உபதேசத்தை கொண்டு வர முடியாது. ஏனென்றால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேதவாக்கியங்களில் இருந்து ஒன்றைக் கூட்டவும், குறைக்கவும் ஒருவராலும் கூடாது.** ஆதலால் இவர்கள் கூறுவது போன்று தீர்க்கதரிசி ஆண்கள் தங்கள் தாடி, மீசையை சவரம் செய்து விட்டு அவர்கள் முகத்தை எப்பொழுதும் பளபளப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உபதேசத்தை கொண்டு வந்திருக்க முடியாது. அது அவராலும் கூடாது. உதாரணமாக பாருங்கள், பெண்கள் தங்கள் கால்களில் உள்ள மயிரை சவரம் செய்யலாமா என்று கேட்ட கேள்விகளுக்கு கூட அது குறித்து என்னால் ஒன்றும் கூறமுடியாது. சவரம் செய்யலாமா அல்லது செய்யக் கூடாதா என்பதை உங்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன் என்கிறார். கே.ப 416. இப்படியிருக்க சகோ. பிரன்காம் தவறான கருத்தை கூறுவார் என்று நாம் எதிர்பார்க்கவே முடியாது. இது இவர்களாகவே அவர் பெயரைச் சொல்லி சொல்லி தங்கள் உபதேசங்களைக் கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆதலால் இந்த கோஷ்டியையும் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதிருக்கிறது.

**29.** முடிவாக ஆதிகாலங்களில் ஆண்கள் தாடி, மீசை வைத்திருந்தார்கள். அதை கத்தரித்து குறைத்தார்கள். ஆனால் அதை சவரம் செய்யவில்லை. சவரம் செய்வது மிகுந்த அவமானமாகக் கருதப்பட்டது. ஆனால் சவரம் செய்து கொள்ளும் வழக்கம் எப்பொழுது ஆரம்பித்தது என்று என்னால் கூறமுடியாது. **வேதப்பிரமாணத்துக்கு எதிராக ஒருவன் ஆண்கள் தங்கள் தாடி, மீசையை சவரம் செய்து கொள்ள வேண்டும் என்று உபதேசிக்க கூடாது. அப்படி உபதேசிப்பது தேவனுடைய ஆண்களுக்குரிய ஒரு பிரமாணத்தை மீறுவதாகும். அப்படியானால் அது பிசாசாகும்.**

30. **ஆண்களுக்குரிய தாடி, மீசை என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படியாக தேவன் ஆண்கள் சரீரத்தில் நியமித்த ஒரு மாறாப்பிரமாணம். தாடி, மீசையை சவரம் செய் எனக் கூறுவது தலைமயிரை சவரம் செய், நெஞ்சில் வளரும் மயிரை சவரம் செய், கால்களில் உள்ள மயிரை சவரம் செய் என்று கூறுவதற்கு ஒப்பாகும்.** ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே ஆரோக்கியமான அனைத்து உபதேசங்களும் வேதவாக்கியங்களிலிருந்தே வரவேண்டும். ஏனென்றால் எல்லாவற்றிற்கும் ஆதாரம் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தை தான். பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, சத்திய ஆவியாகிய அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவாராக. ஆமென்.

**31. சகோ. டேனியேல் ஆசிர்வாதம் குருப்பினர்களுக்கு: சகோதரர்களே! என்னை நோக்கிப் பார்க்க வேண்டாம். நான் உங்கள் சகோதரன். என் பேரில் கவனம் செலுத்த வேண்டாம். நான் இறக்க வேண்டிய ஒரு மனிதன். எல்லாரையும் போல் நானும் இறக்கவேண்டியவன். எனக்கு செவிகொடுக்கச் செய்யாதீர்கள்; ஆனால் நான் உரைத்தவைகளுக்கு மாத்திரம் செவிகொடுங்கள். நான் உரைத்தது செய்தியாகும். செய்தியாளன் பேரில் கவனம் செலுத்தாதீர்! ஆனால் செய்தியை நன்கு கவனியுங்கள். உங்கள் பார்வை செய்தியாளன் பேரில் அல்ல. செய்தியில் இருக்க வேண்டும். அது என்ன கூறிற்றோ அதன் பேரில் மாத்திரமே நாம் கவனம் செலுத்த வேண்டும். (ஐயா, இது தான் முடிவின் அடையாளமா? நாள் டிசம்பர் 30, 1962, பத்தி 433) தாடி, மீசையை ஆண்கள் சவரம் செய்து கொள்ள வேண்டும் என உபதேசிக்கும் எனக்கு அருமையான சகோ. டேனியேல் ஆசிர்வாதம் குருப்பினர்களே, ஆண்கள் தாடி, மீசையை சவரம் செய்து கொள்ள வேண்டும் என்பது லவோதிக்கேயா சபைக்குரிய செய்தியா? இச்சபைக்குரிய செய்தி அது என்று உங்களால் நிரூபிக்கமுடியுமா? வெளிநாட்டிலுள்ள ஒரு சிலருக்கு வால் பிடிப்பதற்காக, இப்படிப்பட்ட அவதூறான உபதேசங்களைக் கொண்டுவந்து, மக்களைத் தங்கள் விசுவாசத்திலிருந்து வழி விலகச் செய்து ஏன் சாத்தானின் பணியை செய்து வருகிறீர்கள்? இந்த செய்தித் தொகுப்பு உங்கள் கரங்களில் கிடைக்கும் வேளையிலிருந்து உங்கள் மாறுபாடான உபதேசத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பீர்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். இது உங்களுக்கு என் அன்பின் அறிவுரை. பல இடங்களுக்குச் சென்று சுவிஷேச ஊழியம் செய்து வருகிறீர்கள். அது கறைபடாதபடிக்கு பார்த்துக் கொள்ளுங்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை இன்றைக்கும், என்றென்றைக்கும், சதாகாலங்களிலும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்.**

நவம்பர் – டிசம்பர், 2006

கிறிஸ்துவின் அன்பில்,
**சகோ. காலேப் யோசுவா**

## மூடனுடைய மூன்று பக்க முரண்பாடுகள்

1. தமிழ்நாட்டில் உள்ள இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்களை தன்னுடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகங்களினால் வஞ்சித்து வந்த பிசாசு என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படும் ராஜாவிடமிருந்து எனக்கு வராவிட்டாலும், மற்றொரு சகோதரனுக்கு வந்து, அவர் சகோதரனே இதோ பாருங்கள்! உங்களைக் குறித்து மீண்டும் தரக்குறைவாகவும், தாறுமாறாகவும் ராஜா எழுதியுள்ளான் என்று கொண்டு வந்து கொடுத்த அவனது சுற்றறிக்கை 15 மற்றும் 25, செப்டம்பர் தேதியிடப்பட்டது (2+1 ஆக 3 பக்கங்கள்) குறித்து நான் சில விளக்கங்கள் கொடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளேன்.

2. நான் உங்கள் அனைவருக்கும் அனுப்புவது போன்று இவனுக்கும் அனுப்பி வரும் எனது செய்தித்தொகுப்பு ஆகஸ்ட் மாதத்திற்குரியது தனது மனைவிக்கு வந்த ஒரு மிரட்டல் கடிதம் என்று எழுதுவானாகில் அவன் எவ்வளவு பெரிய ஒரு நயவஞ்சக போர்வழி என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். இவன் திருப்பூரிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டபின்பு, மனைவி மக்களுடன் தங்கவழியின்றி தன் தம்பி வீட்டில் அடைக்கலம் புகுந்தான். இவனுடைய காரியங்கள் எதுவும் இவன் குடும்பத்தில் யாருக்கும் பிடிக்காது. இது நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மை. ஆனாலும் தம்பி இருக்க இடம் கொடுத்து, படுக்க பாயும் கொடுத்து, சோற்றையும் போட்டான். இவன் அங்கு இருந்து கொண்டு ஊர் வம்புகளை இழுத்துக் கொண்டு வந்ததால் வீட்டை விட்டு விரட்டினான். இவனுக்கு நான் அனுப்பிய செய்தி தொகுப்பு எனக்கு திரும்ப வந்தது. ஆனால் அடுத்து எனக்கு இவனிடமிருந்து இவன் தம்பி விலாசத்திலே ஒரு சுற்றறிக்கையும், இவனது மனைவியின் விலாசம் கொடுத்து அதில் அந்த சகோதரியின் ஒரு சுற்றறிக்கையும் வந்தது. ஆதலால் எனது செய்தித்தொகுப்பை இந்த சகோதரியின் விலாசத்திற்கு அனுப்பி வைத்தேன். அது தான் காரியம். இதை கொண்டு இதோ பாருங்கள் என் மனைவிக்கு ஒரு மிரட்டல் கடிதம் காலேப் யோசுவா எழுதியுள்ளான் என்கிறான் இந்த தில்லு முல்லு போர்வழி.





3. Bro. K. **RAJA**, 5 M/4, Reddiar Colony, Sidco (P.o) Coimbatore – 641021 என்ற இவன் விலாசத்திற்கு நான் அனுப்பிய போஸ்ட் 10.05.2006ல் left என்று எனக்கு திரும்ப வந்துள்ளதை இங்கு ஸ்கேன் எடுத்து பிரசுரித்துள்ளேன். ஆனால் மீண்டும் இவனிடமிருந்து 25.05.2006 அன்று இதே விலாசத்தில் இவனிடமிருந்தும், இவன் மனைவி சகோதரி தீபாவிடமிருந்தும் இரு சுற்றறிக்கைகள் வந்தது. அதில் From தீபா ராஜா என்று எழுதியிருந்தது. இதையும் இத்துடன் ஸ்கேன் எடுத்து பிரசரித்துள்ளேன். ஆகையால் இவன் நாட்டை விட்டு எங்கேயாவது ஓடி விட்டான் போல் தெரிகிறது என யூகித்து எனது ஆகஸ்ட் செய்தித்தொகுப்பை இவன் மனைவி சகோதரி தீபா விலாசத்தில் அனுப்பி வைத்தேன். இதை தான் தன்னுடைய மனைவிக்கு வந்த மிரட்டல் கடிதம் என்று எழுதுகிறான். அதோடு நின்றுவிடாது, என்னைக் குறித்து; சாத்தான் தேவஊழியனை எதிர்க்க எல்லா காரியங்களையும் செய்தும் தோற்று போகும் போது கடைசியில் ஊழியனின் மனைவி மீது , குழந்தைகள் மீது குறி வைப்பான். இது வரைக்கும் எனக்கு சாத்தான் எழுதும் கொச்சையான விமர்சனங்கள் அனைத்தும், என் பெயருக்கே வந்தது. ஆனால் கடைசியில் வந்ததோ என் மனைவியின் பெயருக்கு! என தகாத, தேவையற்ற காரியங்களைப் பிணைத்து எழுதுகிறான் இந்த கள்ள கபடமுள்ள வேலையாள். இதை நீங்களே நான் இங்கு ஸ்கேன் செய்து பிரசுரித்த ஆதாரங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். இவன் உள்ளம் முழுவதுமே தீய எண்ணங்கள், தீய சிந்தனைகள். இவன் உடம்பில் எங்கும், தீமை, தீமை, என்றே எழுதப்பட்டுள்ளது. உங்களுக்கு அனுப்பிய அதே செய்தித்தொகுப்பைத்தான் அந்த சகோதரி பெயரில், விலாசத்தில் அனுப்பியுள்ளேன். அப்படியானால் உங்கள் அனைவருக்கும் அது என்னுடைய மிரட்டல் கடிதம் என்று பொருள்படுமா? நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

4. வியாதிக்கடுத்த அநேக காரியங்களை எனது கடந்த செய்தித்தொகுப்பு ஒன்றில் எழுதியுள்ளேன். ஆதலால் அவனுடைய விமர்சனம் குறித்து மீண்டும் எதுவும் எழுத விரும்பவில்லை. அடுத்து கோவை கோர்ட்டில் பிறபிக்கப்பட்ட பிடிவாரண்ட் குறித்தும் முன்பே எழுதியுள்ளேன். ஆதலால் இனியும் அது குறித்து எதுவும் எழுத விரும்பவில்லை. வியாதியின் அடிப்படையில் நான் விண்ணப்பித்த மூன்று மாத காலத்தவணை முடிந்து விட்டது. மருத்துவ விதிமுறைகள் என் பிரயாணத்திற்கு தடைவிதிக்கிறது. ஆனாலும் மாரிகாலம் முடிந்தவுடன் நான் கோவை கோர்ட் செல்லுவேன்.

5. இந்த கள்ளகபடமுள்ள வேலையாள் என்னைக் குறித்து மக்களை திசைத்திருப்ப எதையாவது ஒன்றை என்னோடு பினைத்து, இணைத்து எழுதிக் கொண்டே இருப்பான். இது நீங்கள் நன்கு அறிந்த விஷயம். ஆதலால் அவை அனைத்துக்கும் என்னால் பதில் கொடுத்துக் கொண்டே இருக்க முடியாது.

6. உங்களையும், உங்கள் குடும்பத்தில் உள்ள அங்கத்தினர்களையும் ஒரு விசுவாசி தரக்குறைவாக எழுதும் அளவிற்கு நீங்கள் நடந்து கொண்டீர்கள் என இவன் எனக்கு எழுதுகிறான். காரியம் என்ன? ஒரு ஊழியக்காரனையும், அவன் குடும்பத்தினரையும் தரக்குறைவாக எழுதும் அளவிற்கு உன்னைப் போன்ற காவாலிப்பயல்கள் கடைசி கால செய்தியில் உள்ள சபைகளில் நிறைந்து கிடப்பதே இதற்கு காரணம். ஏனெனில் பாஸ்டரை போன்று தானே விசுவாசிகள். பாஸ்டர் தேவனுடைய மனுஷனாக இருந்தால் தானே விசுவாசிகளும் தேவனுடைய பிள்ளைகளாக காணப்படுவார்கள். பாஸ்டரை போன்று விசுவாசிகளும் காணப்படுகிறார்கள். இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே! நான் என் பிள்ளைகளை படிக்க வைக்க என் வீட்டை பல லட்சங்களுக்கு வங்கியில் அடமானம் வைத்து, தற்போது போதுமான வருமானம் இல்லாததாலும், மேலும் 3 பெண் பிள்ளைகள் படித்து வருவதாலும் அதை திருப்ப முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இவனை போன்ற இன்னொரு பேலியாளின் மகன் ஒருவன் தன்னை பாஸ்டர் என அழைத்துக் கொண்டு உனக்கு தகாத முறையில் வருமானம் பல இடங்களிலிருந்து வருகிறது. ஆதலால் தானே உன் பிள்ளைகளை படிக்க வைக்க முடிகிறது என எழுதுகிறான்.

7. அடுத்து நான் இவன் எழுதியுள்ளது போன்று எங்கும் கலப்புத் திருமணம் செய்கிறவர்கள், வேலைக்கு செல்லும் பெண்கள், கருத்தடை செய்து கொள்ளும் பெண்கள் வேசிகள் என்று எழுதியது இல்லை. நீங்கள் படித்துவரும் செய்தி தொகுப்பைத் தான் இந்த மாறுபாடுள்ளவனும் படித்து வருகிறான். இவன் முரண்பாட்டின் வித்தாக இருப்பதால் இவனுக்கு மட்டும் நான் எழுதுவது எல்லாம் பிரத்தியேகமான முரண்பாடாகவே தெரிகிறது. நான் எனது 28 ஆண்டுகள் ஊழியத்தில் இவனைப் போன்ற ஒரு கள்ளகபடமுள்ள, சூதுவாதுகளை பிணைக்கும் ஒரு ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாயை ஸ்தாபன சபைகள் மற்றும் இக்காலத்துக்குரிய செய்தியில் எங்கும் காணவே இல்லை.

8. நான் இவனது ஆண்புணர்ச்சிக்கடுத்த காரியங்களை எழுதினதற்கு பாதிக்கப்பட்ட சகோதரன் எனக்கு தனிப்பட்ட முறையில் அது குறித்து எழுதியிருந்தார். அந்த சகோதரனது பாஸ்டரும் அது குறித்து ஒரு சுற்றறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த கடிதங்கள் இன்றும் என்னிடம் உள்ளது. மேலும் இவன் எங்கெங்கு தன் மோக இச்சைகளை நிறைவேற்ற நினைத்தானோ அங்கு எல்லாம் பாருங்கள், நாம் கிறிஸ்துவின் மணவாட்டி, ஆதலால் தான் இந்த சத்தியம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதால், நாம் எந்தவிதமான மாம்ச சம்பந்தமான கிரியைகள் செய்தாலும் கிறிஸ்து அதை பொருட்படுத்துவது இல்லை. அதை அவர் நமக்கு மன்னிக்கிறார். இந்த சிலாக்கியம் அவருடைய மணவாட்டியாகிய நமக்கு மட்டுமே. சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாத இதர ஜனங்களுக்கு இந்த சிலாக்கியம் கிடையாது எனக் கூறி மிக தந்திரமாக அவர்களை வசீகரித்துள்ளான். இவனுடைய இந்த மாயவலையில் விழுந்து விட்டதாக இந்த சகோதரன் அந்நாட்களில் எனக்கு எழுதியிருந்தார்.

9. **2.11.2006** அன்று கன்னியாகுமரியிலிருந்து சகோ. ஜவஹர் ஜோஷ்வா என் வீட்டிற்கு வந்திருந்தார். சில மணிநேரங்கள் என்னோடிருந்து அநேக ஆவிக்குரிய காரியங்களை பகிர்ந்து கொண்டு சென்றார். அப்பொழுது ஊழியத்தின் பாதையில் தன் வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்றுகொண்டிருந்த நாகர்கோவிலில் உள்ள ஊழியக்காரன் இப்படிப்பட்ட உபதேசத்தினால் தன் இனஜனபந்துக்களில் ஒரு குடும்பத்தையே பாழாக்கி சென்று விட்டான் எனக்கூறி வருத்தப்பட்டார். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே இப்படிப்பட்ட உபதேசங்களை கொண்டு வரும் ஊழியக்காரர்களை உங்கள் வாசற்படியில் ஏற்றாதீர்கள். அவர்கள் உங்கள் முழுக்குடும்பத்தையும் சீர்குலைத்து சென்றுவிடுவார்கள். இப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் நம் மத்தியில் பரவிக்கிடக்கிறார்கள். இந்த ஊழியக்காரனைக் குறித்து, இவனை உங்கள் வீட்டு வாசற்படியில் ஏற்றாதீர்கள், இவன் ஒரு பக்கா கேடி என எச்சரித்தேன். அன்று என்னுடைய எச்சரிப்பு இவர் காதில் விழவில்லை. இப்பொழுது வருத்தப்படுகிறார். ஆம் தேவன் நம்மை ஒவ்வொரு காரியத்திலும் எச்சரித்துக் கொண்டேயிருக்கிறார். நாம் தான் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுப்பது இல்லை. ஆனால் அது குறித்து பின் ஒருநாள் வருந்தும் நிலை நமக்கு உண்டாகிறது. இன்றும் அநேக ஊழியக்காரர்களைக் குறித்து நான் சபையை எச்சரித்துக் கொண்டே வருகிறேன். ஆனால் யார் செவிக்கொடுக்கிறார்கள்? என் எச்சரிப்பு யார் காதிலும் விழுந்தாற்போல் தெரியவில்லை. ஆனால் அவர்கள் அனைவரும் ஒருநாள் அதற்காக வருந்தும் நிலை ஏற்படும். அது நிச்சயம் நடக்கும். பாஸ்டர் ஜான் ஐசக்கை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் இன்று தன் முன் நடத்தைகளுக்காக வருந்திக்கொண்டிருக்கிறார்.

10. அடுத்து கருமத்தம்பட்டி சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட சகோதரி எனக்கு நடந்த சம்பவம் குறித்து ஒரு கடிதம் எழுதி அனைத்து ஆவணங்களையும் அனுப்பி இருந்தார். அதன் பேரில் நான் அவர்களிடமும், அன்று காவல் நிலையம் சென்று வந்த சாட்சிகளிடமும் காரியங்களைக் கேட்டு அறிந்த பின் தான் இவனைக் குறித்து எழுதினேன். இன்னும் சில சகோதரர்கள் இவன் அவர்களிடம் செய்த பண மோசடி குறித்தும் எனக்கு கடிதங்கள் எழுதியிருந்தார்கள். அதை சாட்சியாக கொண்டு தான் இவனது ஏமாற்று வித்தைகளை நான் வெளியிட்டு நமது சபைகளை எச்சரித்தேன். இவ்வாறாக இவனைக்குறித்து நான் எழுதிய காரியங்கள் அனைத்திற்கும் என்னிடம் சாட்சியாக சில ஆவணங்கள் உண்டு. இது குறித்து நான் எழுதியதை தான் இவன் நான் அவனை மிரட்டுகிறேன் என எழுதி இவனது தீயமனதை வெளிப்படுத்துகிறான்.

11. சகோ. டேனியேல் கிறிஸ்டியான், சகோ. ஐசக் அருமைநாயகம், சகோ. சாமுவேல் தங்கமணி, சகோ. பால் சங்கரன் என்னை குறித்து நல்ல அபிப்பிராயங்கள் கூறவில்லை என சில எடுத்துக்காட்டுக்களை எழுதியுள்ளான். இந்த நான்கு பேரையும் நான் அதிகமாக நேசிக்கிறேன். ஆனால் ஊழியத்தின் பாதையில் அவர்களிடத்தில் தவறுகள் காணப்படும் போது, நான் அதை தேவனுடைய சபைக்கு சுட்டிக் காட்ட வேண்டியவனாய் இருக்கிறேன். அவர்கள் தவறான உபதேசங்களை சபைக்குள் கொண்டுவரும் பொழுது அதை நான் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. பாருங்கள்! நான் அதை சுட்டி காட்டி சபையை எச்சரிக்க வேண்டும். நட்பு ஒருபுறம். பணி மற்றொருபுறம். பாருங்கள் நட்பைவிட பணி முக்கியத்துவம் வாய்ந்ததல்லவா?

12. நான் **12.10.2006** அன்று மாலை **7.30 – 7.45** மணியளவில் சகோ. பால் சங்கரன் மற்றும் சகோ. ஐசக் அருமைநாயகத்திற்கு போன் செய்து இவன் எழுதிய விபரங்கள் குறித்து விசாரித்தேன். சகோ. ஐசக் அருமை நாயகம் வீட்டில் இல்லை. அவரது மனைவி சகோதரி லீதியாள் யேரி வீட்டில் இருந்தார்கள். அவர்களிடம் பேசினேன். அவர்கள் இருவருமே அவன் எழுதியுள்ளது போன்ற ஒரு கருத்தை தாங்கள் கூறியதே கிடையாது என என்னிடம் கூறினார்கள். என்னை சிலர் வேனில் தூக்கிப்போட்டு அடித்து மிதித்தார்கள் என சகோ. பால் சங்கரன் எப்படி கூறமுடியும்? அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமானால் உங்கள் அனைவருக்கும் அது தெரியாமல் இருக்குமா? நீங்களே யோசித்து பாருங்கள். சகோ. பால் சங்கரன் நான் அப்படி கூறவே இல்லை என்கிறார். சகோ. அருமை நாயகம், அவரது மனைவி, அவர்கள் மகள் ஆக மூவருமாக என் வீட்டிற்கு வந்து, அவர்கள் மகன் திருமணத்திற்கு அழைத்து சென்ற பின், அவர்கள் எப்படி என்னை அழைக்கவில்லை என்று கூறமுடியும்? எல்லாம் இந்த மாய்மாலக்காரனுடைய மாய்மாலங்கள் தான். ஆதலால் இவனை நம்பி மோசம் போகாதிருங்கள். இவன் கொடிய வஞ்சகன். அதோடு மட்டுமல்ல பக்கா கிரிமினல் மைண்டட் பெல்லோ. ஆதலால் இவனிடம் எந்த விதமான பேச்சும் வைத்துக் கொள்ளாதிருங்கள். இவன் உதடுகளின் கீழ் விரியன் பாம்பின் விஷம் இருக்கிறது. இவனை உங்கள் வீட்டின் வாசற்படியிலும் ஏற்றாதீர்கள். ஏற்றினால் இவன் உங்களை ஒருநாள் சந்திக்கு கொண்டு வந்து நிறுத்துவான். நான் எழுதிய காரியங்களை நீங்கள் உறுதிப்படுத்த விரும்பினால் சகோ. பால் சங்கரனை செல் நம். **9841210119** லும், சகோ. அருமைநாயகத்தை செல் நம். **9380781212** லும் தொடர்பு கொண்டு பேசலாம்.

13. பாருங்கள் இந்த பேலியாளின் மகன் பணியே இது தான். என்னைக்குறித்து பலருக்கு போன் செய்வதும் அவர்கள் கூறுவதைக் கேட்டு அத்துடன் இவன் எதையாவது தனக்கு சாதகமாக கூட்டி அவர்கள் கூறியதாக

எழுதுவான். ஆதலால் பிரியமானவர்களே இவன் என்னைக் குறித்து உங்களிடம் ஏதாவது கேட்டு விசாரித்தால், நீங்கள் அது குறித்து என்னிடமே அதை கேட்டு தெரிந்து கொள்ள சொல்லுங்கள். இவன் உங்களுக்கும் எனக்குமிடையில் பிரச்சனைகளை உருவாக்கி, அதில் மகிழ்ச்சி கொள்ளுகிறவன். மாறுபாடுள்ளவன் பிராண சிநேகிதர்களை பிரிக்கப் பார்க்கிறான். தன் மதிகேட்டில் திரியும் மதியீனனாகிய இவன் தன் கரங்களை தட்டி சிரிக்க இடம் கொடுத்து விடாதிருங்கள். மதியீனனுடைய தாய்க்கும், உடன்பிறந்த சகோதர, சகோதரிகளுக்கும், பெண் கொடுத்தவர்களுக்கும், மனைவிக்கும் மகிழ்ச்சியில்லை என்பதை நான் நன்கு அறிவேன். இவனுடைய சகோதரர் சகோ. லாரன்ஸ் 30.06.2006 அன்று மதியம் 2 மணியளவில் என்னிடம் என் சுகநலன்களை விசாரிக்கும்போது இவனிடத்தில் தனக்கு பங்கு என எதுவும் இல்லை எனக் கூறி, எனக்கடுத்த இவனுடைய காரியங்கள் குறித்து வருத்தப்பட்டார்.

14. பாருங்கள்! இந்த பிசாசின் மகன் அன்று தன் சுற்றறிக்கை 25.11.2004 ல் மூன்றாவது பக்கத்தில் எனது செய்தித்தொகுப்புகள் யாவும் 2005 ல் தலை நசுக்கப்பட்டுவிடும். அவைகளுக்கு அதாவது என் ஊழியத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது என எழுதி அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக ஒரு கட்டுக்கதையும் எழுதி மக்களை திசைத்திருப்பி ஏமாற்றினான். ஆனால் 2005 முடிந்து 2006 முடியும் சமயம் நெருங்கிவிட்டது. கர்த்தர் இதுவரை என்னை நிலைநிறுத்தி நான் செய்ய வேண்டிய பணிகளை ஏற்ற வேளையில் செய்துவர தாங்கி, பலப்படுத்தி, பயன்படுத்தி வருகிறார். அவனுடைய வாக்கு மண்ணை கவ்விவிட்டது. இவன் முகம் தற்போது சாக்கடைக்குள் மூழ்கிக் கிடக்கிறது.

15. அடுத்து ஒரு காரியம். பாருங்கள் 25.10.2004 சுற்றறிக்கையில் 12வது பத்தியில் எந்த சபையிலும் பிரசங்கிக்க பீடத்திற்கு அழைப்பு கொடுத்தால் மட்டுமே நான் செல்லுவேன். வாய்ப்பு தேடி செல்லமாட்டேன் என்று பெருமையாக கொட்டு மேளம் கொட்டிக் கொண்டான். ஆனால் இன்று தெருத்தெருவாக, சபை சபையாக, ஊர் ஊராக அலைந்து வாய்ப்புக்களை நாடி, தேடி அலைகிறான். குன்னூர் சகோ. நேசக்குமாரன் காலடியில் விழுந்தான். அவர் உதறித் தள்ளிவிட்டார். பல்லாவரம் சகோ. ஐசக் அருமைநாயகத்தை ஐஸ் வைத்தான். அவர் உன் சவகாசம் ஆகாது என்று கூறிவிட்டார். புகலிடம் எங்கும் கிடைக்கவில்லை. இவனை ஏற்றுக் கொள்ள வாசல்கள் இல்லை. இனி எங்கும், ஒருக்காலும் இவனுக்கு வாசல்கள் திறவாது. ஏனென்றால் இவன் மனந்திரும்ப முடியாது. இவன் சாத்தான்.

16. மேலும் தனக்கு எங்கு பார்த்தாலும் ஸ்பெஷல் மீட்டிங், ஹோட்டல் மீட்டிங், பப்ளிக் மீட்டிங் என தன் ஊழியம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது என தாரை ஊதி தப்பட்டம் அடித்தான். தன் கை ஓங்கியிருக்கிறது என்று அவன் நினைத்தான். செருக்குடன் பேசி பெருமிதம் கொண்டான். ஜம்பப்பேச்சு பேசினான். இன்னும் அது இது என எவ்வளவோ பேசினான். ஆனால் இன்றோ ஒரு செத்த நாய் போல் தெருவில் கிடக்கிறான். இவனை தூக்கி நிறுத்த ஒரு நல்ல சமாரியன் கூட கிடையாது. ஏனென்றால் இவனுடைய ஏமாற்று, மாய்மாலம், பந்தா வாழ்க்கை எத்தனை நாட்கள் தான் இவனை காக்கும்? சகோ. ஜான் ஐசக் முன் சாதி பாகுபாட்டை வைத்து, அவரை நன்கு ஏமாற்றினான். இப்பொழுது அவரும் இவனை அடையாளம் கண்டுகொண்டார். அவரது விசுவாசிகளிடம் ரூ.13,000/–க்கு மேல் கடன் வாங்கி கொடுக்கவில்லை. விசுவாசிகளில் சிலர் கோவை சென்று இவனது இல்லத்தில் இவனை பிடித்தனர். தந்திரசாலி, அவர்களை இவன் வீட்டில் இருக்க வைத்து விட்டு, வெளியே சென்று பணம் ஏற்பாடு செய்துவருகிறேன் என்று கூறி சென்றவன், சென்றவன் தான். ஆள் திரும்பவில்லை. ஆனால் போன் வந்தது. அதாவது பணம் ஏற்பாடு ஆகவில்லை. ஆதலால் சென்னை சென்று விடுங்கள். நான் வீட்டிற்கு வர காலதாமதம் ஆகும் என்பதாகும். இப்பொழுதாவது சூளைமேட்டினருக்கு புத்தி வந்ததற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இந்த சம்பவம் கடந்த ஒரு மாதத்திற்கு முன் என் காதில் ஒலித்தது. சகோ. ஜான் ஐசக் நல்ல மனிதன் தான். அன்று சகோ. தாமஸ் மற்றும் சகோ. ஜோசப்பிற்காக என்னை பகைத்தார். பின் இவன் வந்து சேர்ந்தான். ஜாதி வெறியை தூண்டினான். முன் பகையின் நிமித்தம் இவனைக் கொண்டு என்னை முறியடிக்க சகோ. ஜான் ஐசக் நினைத்தார். கடைசியில் எவனைக் கொண்டு என்னை முறியடிக்க நினைத்தாரோ அவனே இவரையும், இவர் சபை விசுவாசிகளையும் ஏமாற்றி, கொள்ளையடித்து தன் நாடகத்தை முடித்து சென்றுவிட்டான். இப்பொழுது இவர்கள் வருந்துகிறார்கள். இனியாவது இவர்கள் நல்லவர்களை பகைக்காமல் இருந்தால் சரி.

17. வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத சகோ. இராஜேந்திரனை சுனாமி உதவிப்பேரில் வசப்படுத்தினான். இவரை எவ்வளவு கொள்ளையடித்தானோ? அது குறித்த ரிப்போர்ட் எனக்கு இதுவரை கிடையாது. ஆனால் நிச்சயமாக கொள்ளை நடந்திருக்கும். ஏனென்றால் இவன் செல்லும் இடங்களெல்லாம் கொள்ளை நடக்காமல் இருக்காது. ஒருத்தர் மனதை மயக்கி, அவரை தன்வசப்படுத்துவதில் பக்கா திறமைசாலி. ஆனால் இவன் நிலை இன்று பரிதாபம். இவை அனைத்திற்கும் இவனுடைய ஆணவமே காரணம். ஆனால் இவன் தன் அழிவிற்கு பழியை காலேப் யோசுவா மீது போடுகிறான். காலேப் யோசுவா உன் ஊழிய ஆரம்ப நாட்களில் உனக்குச் செய்த ஆவிக்குரிய நன்மைகளை நீ நினைத்திருக்கலாம். ஆனால் அதை மறந்தாய். நான் உன்னுடைய குடும்பத்தில் ஒருவன் போன்று பழகி வந்ததையாவது நினைத்து நீ எனக்கு மரியாதை கொடுத்து இருக்கலாம். அதிலும் தவறினாய். காலேப் யோசுவா தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் ஒரு வளர்ச்சியடைந்த மூத்த சகோதரன், மேலும் கர்த்தர் எடுத்து பயன்படுத்தும் ஒரு பாத்திரம் என்றாவது உன் உள்ளத்தில் ஒரு நல்ல எண்ணம் உதயமாயிருக்கவேண்டும். அதுவும் இல்லை. அடுத்து காலேப் யோசுவா வயதுக்காவது மதிப்பு கொடுத்திருக்கலாம். அதையும் நீ உதாசினப்படுத்தினாய். மேலும் கர்த்தர் உனக்கு கொடுத்த தருணங்கள் அனைத்தையும் நிராகரித்தாய். ஆதலால் கர்த்தருடைய பயங்கரமான கரம் உன்மேல் வந்தது. இன்று அதன் பலனை அநுபவிக்கிறாய். அது தான் உண்மை. ஆதலால் தயவு செய்து காலேப் யோசுவா மீது உன் பழியை போடாதே. காலேப் யோசுவா தன்னில் தான் ஒன்றுமே இல்லை.

18. இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் இவனை முகத்தில் காரி, துப்பி துரத்திவிட்டார்கள். எங்கும் போக்கு வரத்துக்கு வழியில்லை. ஆதலால் காலேப் யோசுவாவை திட்டி, திட்டி எதையாவது எழுதிக் கொண்டே தன் காலத்தை கடத்தி வருகிறான். இந்த நிலை இன்னும் நீடிக்குமானால் இவன் நிலை இன்னும் மோசம் ஆகும் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே எச்சரிக்கிறேன்.

19. கோவை மேட்டுப்பாளையத்தில் ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவர் வெளி நாடு ஒன்றில் வேலை செய்வதாகவும், அவர்கள் ஸ்தாபன சபை விசுவாசிகள் எனவும், அவர்கள் சில ஸ்தாபன ஊழியக்காரர்களுக்கு பிரதி மாதம் பண உதவி செய்வதாகவும், அதில் இவன் ஒரு நபர் எனவும் இவனது உறவினர் ஒருவர் என்னிடம் கூறினார்.

20. பஸ் விபத்து காரியம் படிக்க மிக்க சுவாரசியமாக இருந்தது. அதிலும் வீண் புகழ்ச்சி, பெருமை, பந்தா. ஆனால் நடந்த காரியம் ஒன்றும் அப்படியில்லை. எல்லாமே மக்களிடம் அனுதாபம் பெற ஒரு நாடகம். சிறு சம்பவத்தை பெரிது படுத்திய ஒரு நாடகம். இவனுடைய நடிப்பில் ஏமாறாதீர்கள்! ஏமாறாதீர்கள்!!

21. முடிவாக எனக்கு விரோதமாக நீ உருவாக்கும் அனைத்து ஆயுதங்களும் வாய்க்காதே போகும். உன் அனைத்து அகங்காரத்தையும், இடும்புகளையும், சவால்களையும் சந்திக்கக்கூடிய நிலையில் கர்த்தர் என்னை நிலைநிறுத்தி வைத்துள்ளார். என் காலங்கள் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. அவர் என்னை கரம் பிடித்து வழிநடத்தி வருகிறார். நான் செயல்பட்டு வருகிறேன். நான் உன்னை போன்று பொய் வழக்குகள் போட்டு கரடி வித்தைகள் காட்டுகிறவன் அல்ல. நியாயமான முறையில் உன் மீது நீதிமன்ற வழக்கு தொடர்ந்து உன்னை சந்திக்க வாஞ்சிக்கிறேன். நான் உன் வழக்கை சந்திப்பது போல நீயும் என் வழக்கை சந்திக்க வேண்டியதிருக்கும். ஆனால் என்னை ஆட்கொண்டு வழிநடத்துகிறவர் அதற்கு அனுமதி கொடுத்தால் மாத்திரமே.

## முக்கிய அறிவிப்பு

1. என்னோடு வழக்கமாக தொடர்பு கொண்டு வருகிற, எனக்கு மிக்க அருமையான சகோதர சகோதரிகள் இந்நாட்களில் என்னிடம் பேசும்பொழுது, சகோதரனே ராஜாவை குறித்து இனி தயவு செய்து எதுவும் எழுதாதீர்கள். அவனுடைய நடபடிகளை வெளியரங்கமாக்கி, நாங்கள் அவனை புரிந்து கொள்ளும் அளவுக்கு இது வரை நீங்கள் எழுதியது போதும். இனியும் வேண்டாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஆனால் இவன் இனி உங்களை குறித்து எது எழுதினாலும் அதற்கு விளக்கம் நீங்கள் எதுவும் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டாம். நாங்கள் அவனை இனி எங்கள் வீடுகளிலோ அல்லது சபைகளிலோ ஏற்றுக் கொள்ள மாட்டோம். அதோடு மட்டுமல்ல கடைசிகால செய்தி ஊழியத்தில் அவனை ஒரு பொருட்டாக எண்ணுவதும் கிடையாது. அவன் உங்களைப் பற்றி எழுதுவதில் எந்த தவறான எண்ணமும் எங்கள் மனதில் எழும்பாது. நீங்கள் எழுதும் அநேக ஆவிக்குரிய காரியங்களை மட்டுமே நாங்கள் விரும்புகிறோம். ஆதலால் இனி அதற்காக கர்த்தர் உங்களுக்கு கொடுத்த காலங்களை செலவிடுங்கள் என கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் கேட்டுக் கொள்வதிலும் உண்மை இருக்கிறது.

2. மேலும் எனது கோவை வக்கீல் ஒரு சிறந்த கிறிஸ்தவர். நான் டைப் செய்யும் அலுவலகத்தில் பணிபுரியும் இளம் பெண்கள் பெந்தெகொஸ்தே அநுபவத்தினர். எனக்கும், இவனுக்கும் இடையில் காணப்படும் எழுத்துப்பறிமாற்றங்கள் அவர்களுக்கும் மிக்க இடறலாக காணப்படுகிறது. நாங்கள் இருவரும் ஒருவரைக் குறித்து மற்றொருவர் எழுதிவரும் காரியங்கள் இன்னும் அநேகருக்கு இடறலாகவே இருக்கிறது. என்னைப் பொறுத்த அளவில் நான் யாருக்கும் இடறலாக இருக்க விரும்பவில்லை. மாயைகளைப் பேசும் இவனது வாயையும், ஒருவனுக்கு விரோதமாக சூதுவாதுகளைப் பிணைக்கும், மாறுபாடான போதனைகளை எழுதும் இவனுடைய கள்ளத்தனமான வலது கையையும் நீங்கள் அனைவரும் நன்கு அறிந்து கொண்டீர்கள். அது எனக்குப் போதும். ஆதலால் இத்துடன் இவனது காரியங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, இனி இவனுக்கடுத்த காரியங்களில் நீதிமன்ற வழக்கில் மட்டும் தேவைப்படும்போது எனது நேரத்தை பயன்படுத்தவுள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

3. இந்த கள்ளகபடமுள்ள வேலையாள் பற்றி எழுதியது போதும், போதும். இனி பிள்ளைகளின் ஆவிக்குரிய போஜனத்திற்காக மட்டுமே என்னுடைய நேரங்களை செலவிடப்போகிறேன். இவனிடம் நான் வசமாக சிக்கியுள்ளேன். இனி நான் தப்ப முடியாது என நாய் சந்திரனைப் பார்த்து குரைப்பது போல் குரைக்கிறான். உன் கோர்ட் நடவடிக்கைகளை நான் சந்திக்க ஆயத்தமாகவே இருக்கிறேன். அதில் பின்வாங்குவது இல்லை என திரும்பத்திரும்ப உனக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக கர்த்தர் அக்கிரமக்காரன் வைத்த கண்ணியின் சிக்குகளுக்கும், சுருக்குகளுக்கும் என்னை விலக்கிக் காத்துக் கொள்வார். ஏனென்றால் நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று நன்கு அறிவேன். ஆனாலும் இவனது அக்கிரமம் அளவு கடந்து தொடர்ந்து பெருகுமானால் பின் நான் அதில் மறுபடியும் தலையிட வேண்டியது வரும்.

4. இவனது தவறான உபதேசங்கள் குறித்து அவ்வப்போது நான் விமர்சனம் செய்யவேண்டியது இருக்கும். அதை எந்த நிலையிலும் நிறுத்த முடியாது. இவன் இந்த போர் நிறுத்த பிரகடனத்தை பிரயோஜனப்படுத்திக் கொண்டால் அது அவனுக்கு நலமாக இருக்கும். பிரியமானவர்களே நீங்கள் எனக்காகவும், என் குடும்பத்தினருக்காகவும் வழக்கம் போல் ஜெபியுங்கள். உங்களது ஜெபமே, எங்களது ஜெயம்.

## 19.11.2006 அன்று நான் கிறிஸ்துவுக்குள் 28 வயது நிறைந்த ஒரு பராக்கிரமசாலி

1. முன்நாட்களில் திருநெல்வேலி மாவட்டம், இந்நாட்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூரில் ஒரு ஏழை, எளிய, தெய்வபக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் நான்கு ஆண்கள், மூன்று பெண்கள் மத்தியில் ஏழாவது நபராக பிறந்து, தென் இந்திய திருச்சபை (CSI) போதகத்தில் பயபக்தியுடன் வளர்க்கப்பட்டேன். கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படியே ஏழாவது பிள்ளையாக, ஏழாவது சபை காலத்திற்குரிய செய்தியைக் கொண்டு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பக்திவிருத்தியடைய செய்வதற்காக, அதற்கு சுவிசேஷகனாக முன்குறிக்கப்பட்டிருந்தேன் என்பதை ஊழிய தொடக்கத்திலிருந்தே அறிந்து கொண்டேன். கர்த்தருடைய மேலான நாமத்திற்கு ஸ்தோத்திரம். படிப்பு அறியாத, ஆனால் தேவபக்தியுள்ள தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்து நடந்த குடும்பத்தில் பிறந்த கடைசி, ஏழாவது பிள்ளைக்கு காலேப் யோசுவா என்று பெயரிட்டதே தேவனுடைய ஆலோசனை, பரிசுத்தஆவியின்

வழிநடத்துதல் மற்றும் முன்குறித்தல் ஆகும். இவர்களில் நானும் என் வீட்டார் மட்டுமே இக்காலத்துக்குரிய செய்தியில் மிக்க உறுதியாக, பக்திவைராக்கியத்துடன் இருக்கிறோம். சாயங்கால வெளிச்சத்தைக் காண, அந்த வெளிச்சத்தில் எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்திக்கொள்ள கர்த்தர் எங்களுக்கு கொடுத்த கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோம். குடும்பத்தில் மற்றவர்கள் செய்தியை அறிந்தும், அதற்கு செவி கொடுக்காது, நமது மக்கள் மத்தியில் காணப்படும் குழப்பங்கள், வேற்றுமையான உபதேசங்கள் மற்றும் ஊழியர்களின் சாட்சியற்ற வாழ்க்கைகளை ஆதாரமாக சுட்டிக் காட்டிக் கொண்டே இடறுகிறார்கள். இது முற்றிலுமாக ஒரு வஞ்சிப்பின் காலமாக இருப்பதால், சபைகளின் நிலை அப்படித்தான் இருக்கும். ஆதலால் தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்துக்குரிய செய்திக்கு செவிகொடுங்கள் என்றால் தங்கள் செவிகளை அடைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் இருதயம் கடினப்பட்டு காணப்படுகிறது. இவர்களது கடின மனதை தேவன் மாற்ற ஜெபியுங்கள்.

2. ஆக, வீட்டின் கடைசி மகன், செல்லப்பிள்ளை. தாயோடு ஒரே கட்டிலில் படுத்துக் கொண்டு, தாயின் சேலை முந்தானியை பிடித்துக்கொண்டே பத்தாவது வகுப்பு வரை படித்தான். செல்லப்பிள்ளை ஊரில் நலமான காரியங்களுக்காக அடாவடித்தனம் பண்ணுவதிலும் பேர்பெற்று விளங்கினான். ஒரு கூட்டம் பையன்களோடு தனித்து நின்று சண்டைபோடும் மனத்தைரியம் கொண்டவன். இதனால் அந்நாட்களில் உடம்பில் ஏற்பட்ட சில காயங்களின் தழும்புகள் இந்நாட்கள் வரை உண்டு. அந்நாட்களில் தனிமையில் காணப்பட்ட மனத்தைரியம், இந்நாட்களில் ஊழியத்தின் பாதையிலும் காணப்படுவதைக் கண்டு கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். ஆனால் அன்றும் இன்றும் கர்த்தர் எனக்கு எல்லாவற்றிலும் உறுதுணையாக இருந்து வருகிறார். அல்லேலூயா!

3. படிப்பில் மண்டு. பத்தாவது வகுப்பில் இரு ஆண்டுகள். அடுத்து P.U.C. யிலும் அதே காரியம் தான். எப்படியோ கால்நடை மருத்துவக் கல்லூரியில் (B.V.Sc) யில் இடம் கிடைத்தது. அங்கும் அடாவடித்தனம். முதலாண்டு மாணவன் நான்காம் ஆண்டு மாணவர்களை வந்து பார் என்று கூற ஆரம்பித்தேன். என்னை யாரும் ராக்கிங் செய்யமுடியவில்லை. அந்த காலத்திலும் ராக்கிங் கல்லூரிகளில் தலைவிரித்தாடியது. அடாவடித்தனத்தின் முடிவு கல்லூரி என்னை நீக்கும் முன்னே குடும்பத்தில் யாருக்கும் தெரியாது எனது இரண்டாவது சகோதரர் தயவினால் வடநாட்டிற்கு ஓடி சென்றுவிட்டேன். எனது இரண்டாவது சகோதரர் அந்நாட்களில் மத்திய இரயில்வேயில், மத்திய பிரதேசத்தில் தமோ என்ற இடத்தில் ஒரு Head Drafts Man ஆக வேலை பார்த்தார். இன்று அவர் ஒரு மூத்த இரயில்வே அதிகாரியாக ஓய்வு பெற்று தூத்துக்குடியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவர் ஒத்தாசையில் மத்திய இரயில்வேயில் பணியில் அமர்த்தப்பட்டேன்.

4. அவருடைய பெயரைக் கொண்டு அங்கும் அதே நலமான காரியங்களுக்கு அடாவடித்தனம். ஹிந்தி பேசும் மக்கள் மத்தியில் வேலைப் பார்த்துக் கொண்டு ஹிந்தி பேசத் தெரியாத நான் ஒட்டை, உடைசல் ஆங்கிலத்தைப் பேசிக் கொண்டு உடன் பிறந்த சகோதரனின் பெயரைக் கூறிக் கொண்டு, அடாவடித்தனம் பண்ணிவந்தேன். மேலதிகாரிகள் பொறுத்து பொறுத்துப் பார்த்தனர். முடிவில் ஒன்றன் பின் ஒன்றாக என் மீது எட்டு குற்றச்சாட்டுகள் (Charge Sheets) பதிவு செய்தனர். விசாரணைகள் நடந்தது. நான் இரயில்வே வேலையில் இருந்து டிஸ்மிஸ் (Dismiss) செய்யப்பட்டேன். இந்த தண்டனை மிக மிக அதிகப்பட்சமானது. ஏனென்றால் அந்த இளம் வயதில் நான் வேறு எந்த அரசு உத்தியோகத்திலும் சேர முடியாது. ஆதலால் அப்பீல் (Appeal) செய்தேன். தண்டனை சற்று குறைக்கப்பட பணியில் இருந்து பணி நீக்கம் (Removal) செய்யப்பட்டேன். அதாவது நான் இதர அரசு பணிகளில் சேர வழி செய்து கொடுக்கப்பட்டது. ஆனாலும் நான் பணிநீக்கம் செய்யப்பட்டது தவறு என என் மனச்சாட்சி அந்த தீர்ப்புக்கு எதிராகவே உள்ளது. ஏனென்றால் எனது அடாவடித்தனம் அனைத்தும் எங்கும் நேர்மைக்காகவும், நீதிக்காகவுமே இருந்தது.

5. ஆதலால் மும்பை உயர்நீதிமன்றத்தில் (Bombay High Court) வழக்கு தொடர்ந்தேன். ஏனென்றால் மத்திய இரயில்வே தலைமை அலுவலகம் மும்பையில் இருக்கிறது. ஒரு நீதிபதி விசாரணையில் தோல்வியைக் கண்டேன். பின் இரு நீதிபதிகள் விசாரணைக்கு அப்பீல் செய்தேன். இரு நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பும் தோல்வியையே கொண்டு வந்தது. இப்படி அடாவடித்தனம் செய்யும் ஒருவன் அரசு பணிகளில் பணிப்புரிய தகுதியற்றவன் என்பதே அந்த தீர்ப்பாக இருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எதற்காக அந்த அடாவடித்தனம் செய்தான் என்பதை யாரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. கீழ்ப்படியாமை, கீழ்ப்படியாமை என்பதே அவர்கள் பல்லவியாக இருந்தது. கீழ்ப்படியாமை ஏன் என்பதை சிந்திப்பார் யாரும் இல்லை. நேர்மையான காரியங்களுக்கான அடாவடித்தனம், கீழ்ப்படியாமை என அர்த்தம் கொள்ளப்பட்டது.

6. நீதிமன்ற வழக்கிற்காக மும்பை வந்தவன் மும்பையிலேயே தங்க ஆரம்பித்துவிட்டேன். திருச்சியில் வர்த்தகத்தில் இருந்த எனது மூத்த சகோதரர் மும்பையில் எனக்கு ஒரு கம்பெனியில் வேலைக்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். அந்நாட்களில் தான் புத்தி தெளிந்தது. உலகத்தை புரிந்து கொண்டேன். கடினமாக உழைப்பு. ஒரு கிளார்க் பதவியிலிருந்து, படிப்படியாக ஒரு கொள்முதல் செய்யும் அதிகாரி (Purchase Officer) நிலையை அடைந்தேன். பணியின் நிமித்தமாக மும்பை மாநகரத்தையே காரில் சுற்றி வலம் வந்தேன். அனுபவங்கள் நிறைய கிடைத்தது. வேலையை விட்டேன். சொந்த தொழிலை ஆரம்பித்தேன். கை நிறைய பணம். ஆனாலும் தேவபக்தி, தெய்வபயம் என் உள்ளத்தை விட்டு அகல வில்லை. அந்நாட்களில் நெல்லை மாநிலத்தைச் சார்ந்த சகோ. தேவதாஸ் என்பவரின் தொடர்பு கிடைத்தது. அடுத்து என் சொந்த ஊரில் எனக்கு திருமணமும் நடந்தது. எனது சொந்த ஊருக்கு பக்கத்து ஊரில் உள்ள தென் இந்திய திருச்சபையின் குருவானவரின் மகள் தான் எனது மனைவி. அந்நாட்களிலே என் மனைவியை பணி செய்ய வெளியே செல்லக் கூடாது என்பது எனது உள்ளத்தில் இருந்தது. நான் உழைத்து அவளை போஷிக்கவே விரும்பினேன். அவளது உழைப்பை எனது கூடுதல் வருமானமாக கொள்ளும் பணஆசை என் உள்ளத்தில் அன்றே இல்லை. அவள் ஒரு ராணியாக, நல்ல சிறந்த இல்லத்தரசியாக என் வீட்டில் இருப்பதையே விரும்பினேன். கர்த்தர் அதை நிறைவேற்றினார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

7. சகோ. தேவதாஸ் மூலம் சகோ. டேனியேல் கிறிஸ்டியான் நட்பு கிடைத்தது. அவர்கள் இருவரும் திருநெல்வேலி மாவட்டத்தில் பக்கத்து பக்கத்து ஊர்காரர்கள், நானோ கொஞ்சம் தூரத்தில் உள்ளவன். ஆக மூவருக்கும் உள்ளத்தில் பக்திவைராக்கியம் இருந்ததால் நட்பு நீடித்தது. தென் இந்திய திருச்சபையை விட்டு அசெம்பிளி ஆப் காட் சபை செல்ல ஆரம்பித்தோம். பாஸ்டருடன் நல்ல ஐக்கியம் இருந்தது. **எழும்பிப் பிரகாசி** என்ற பெயரில் எனது பணச் செலவு பொறுப்பில் பத்திரிக்கை ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது.

8. இந்நிலையில் மும்பையில் புளோரா பவுண்டன் (Flora Fountain) என்ற இடத்தில் சகோ. டேனியேல் கிறிஸ்டியான் மற்றும் சகோ. தேவதாஸ் மாலை நேரத்தில் உலாவ சென்று கொண்டிருந்த சமயத்தில், அங்கு பிளாட்பாரத்தில் உள்ள ஒரு புத்தக கடையில் சகோ. பிரன்காமின் **உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து** என்ற செய்தி புத்தகத்தை காண, அதை விலைக்கு வாங்கி அவர்கள் வாசிக்க, ஆவியானவரால் ஏவப்பட்டு, அதன் மூலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் ஒன்றே சரியானது என்ற முடிவுக்குவந்து உல்காஸ் நகர் (Ulhas Nagar) பாஸ்டர் கான்வே என்பவரிடம் ஞானஸ்நானம் பெற்றனர்.

9. இந்நாட்களில் எனது மனைவி தன் முதல் பிரசவத்திற்கு எனது சொந்த ஊர் வந்துவிட்டாள். இவர்கள் என்னிடம் வந்து தாங்கள் பெற்ற ஞானஸ்நானம் குறித்து பேச, நான் எனது முடிவிற்கு கால அவகாசம் கேட்டு, அநேக திரித்துவ குழந்தை மற்றும் முழுக்கு ஞானஸ்நான புத்தகங்களை வாங்கி தியானிக்க ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியானவர் என் உள்ளத்திலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் எடுக்கும் ஞானஸ்நானமே சரியான ஞானஸ்நானம் என்று உணர்த்த ஆரம்பித்தார். நாங்கள் அசெம்பிளி ஆப் காட் சபைக்கு செல்வது நிறுத்தப்பட்டது. ஒரு ஞாயிறு நான் வீட்டில் தனியாக இருந்து கொண்டிருந்த சமயம், சகோ. தேவதாஸ் காலை நேரத்தில் வந்தார். அவர் என்னிடம் இன்று நான் உங்களை ஒரு சபைக்கு கூட்டிக் கொண்டு செல்கிறேன், தட்டாமல் வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நான் முழு மனதுடன் செல்லாமல், அவர் வருந்தி கேட்டுக் கொண்டதின் பேரில் சென்றேன். நாங்கள் சென்ற சமயம் ஆராதனை நடந்த கொண்டிருந்தது. அந்த கூடார வாசல் அருகில் கடைசியில் நாங்கள் சென்று உட்காந்தோம். ஆராதனை வேளையில், இவர் தான் பாஸ்டர் கான்வே என்றும் இவர் தான் சகோ. டேனியேல் கிறிஸ்டியான், சகோ. தேவதாஸ் இருவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார் என்பதையும் அவருடைய போதனைகளிலிருந்து அறிந்து கொண்டேன். ஆராதனை முடிந்தது. கர்த்தர் கிரியை செய்ய ஆரம்பித்தார்.

10. பாஸ்டர் என்னிடம் நேராக வந்தார். மிகமிக சுருக்கமாக சில கேள்விகள் மாத்திரமே கேட்டார். நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். ஆம் என்றேன். பின் தடையெதற்கு என்றார். நான் தடையெதுவும் இல்லை என்றேன். அப்படியானால் ஆற்றுக்கு செல்லலாமா என்றார். செல்லலாம் என்றேன். மாற்று துணிகள் எடுத்துக் கொண்டு வருகிறேன் என்றார். தற்போது நான் அணிந்திருக்கும் ஆடையே போதும் என்றேன். எனக்கு அப்.8அதி. எத்தியோப்பியா மந்திரி ஞானஸ்நான சம்பவமே ஞாபகத்தில் வந்தது. ஞானஸ்நானம் பெற்றேன். அப்பொழுது சுமார் மதியம் 12.00 மணி, நாள்:19.11.1978. அன்று முதல் அனைத்து தீய பழக்க வழக்கங்கள் மறைந்தன. ஒரு புது சிருஷ்டிப்பு ஆனேன். 21 ஆம் தேதி அலுவலகம் சென்றேன். அங்கு 19.11.78 அன்று மதியம் சுமார் 12.00 மணி அளவில் ஒரு ஆண் குழந்தை என் மனைவிக்கு பிறந்திருப்பதாக தந்தி வந்து கிடந்தது. ஆம், 19.11.1978 ல் கிறிஸ்துவுக்குள் நான் பிறந்தேன். அன்று எனக்கு ஒரு மகன் ஆதாமுக்குள் பிறந்தான். அன்று முதல் கிறிஸ்துவுக்காக, இக்காலத்துக்குரிய செய்திக்காக ஒரு பக்தி வைராக்கியம் என் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. செய்தியை பிரஸ்தாபப்படுத்த உற்சாகத்துடன் முழுமனதுடன் செயல்பட ஆரம்பித்தேன். கர்த்தர் இம்மட்டும் வழிநடத்தி வருகிறார்.

11. சகோ. டேனியேல் கிறிஸ்டியான் இல்லத்தில், அவரது குடும்பம், சகோ. தேவதாஸ் குடும்பம், என் குடும்பம் ஆக மூன்று குடும்பங்கள் இணைந்து ஆராதனை ஆரம்பித்தோம். சகோ. டேனியேல் கிறிஸ்டியான் வழிநடத்தினார். அனுதினமும் எனது இல்லத்தில் நாங்கள் மூவரும் கூடி செய்தியைக் குறித்து தியானிக்க ஆரம்பித்தோம். சில வேளைகளில் இரவு முழுவதும் உட்கார்ந்து தியானிப்போம். என் மனைவி எங்களுக்கு ஆகாரம், சிற்றுண்டி வேளாவேளையில் தயார் செய்து கொடுத்துக் கொண்டே எங்களை உற்சாகப்படுத்தி வருவாள். அவளும் மரியாளைப் போன்று தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டவளாக காணப்பட்டாள். ஆம், தேவையானது ஒன்றே, அதைப்பற்றிக் கொண்டாள். என் சரீரத்தின் ஒரு பாகமாகவே காணப்படுகிறாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

12. எனது பொறுப்பில் உருவெடுத்த **எழும்பிப் பிரகாசி** பத்திரிக்கை நாங்கள் செய்திக்குள் வந்தவுடன் **இயேசுவே வாரும்** என்ற பெயரில் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக எழும்பிப் பிரகாசித்தது. ஊழியம் வளர்ந்தது.

13. சில ஆண்டுகளுக்குள் சகோ. டேனியேல் கிறிஸ்டியானுக்கும் எனக்கும் ஊழியத்தின் பாதையில் வார்த்தையில், இக்காலத்திற்குரிய செய்தியில் கருத்து வேறுபாடுகள் உருவாயிற்று. அவர் தனக்கு ஏதோ ஒரு பெரிய ஊழியம் உண்டு என நினைத்துக் கொண்டு தன்னை சகோ. பிரன்காமோடு ஒப்பிட ஆரம்பித்தார். இதோ அங்கே மேகஸ்தம்பம், இங்கே மேகஸ்தம்பம்; சகோ. பிரன்காம் ஒரு மரப்பலகையினால் செய்த வீட்டில் வாசம் பண்ணினார், நானும் அப்படியே வசித்து வருகிறேன்; மும்பையிலிருந்து செய்தி தன் ஊழிய வாயிலாக உலகம் முழுவதும் செல்லப்போகிறது; சகோ. பிரன்காம் ஏழுமுத்திரையின் கடைசி பகுதியில் குறிப்பிடும் கருப்பு மனிதன் நான் தான் என்று புலம்ப ஆரம்பித்தார். சகோதரனுடைய உள்ளத்தில் கிறிஸ்துவுக்காக, செய்திக்காக பக்தி வைராக்கியம், ஊழிய பாரம் இருந்தது. அது உண்மை தான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அது காலப்போக்கில், அவர் அறியாமலே அவரை திசைத்திருப்பியது. **மற்றொரு ஆவி அவரை வழிநடத்த ஆரம்பித்தது.** இதனால் எங்களுக்குள் இருந்த ஒருமனப்பாடு சீர்குலைந்தது. ஐக்கியத்தில் பிளவு ஏற்பட்டது. மேலும் அவருடைய சில சாட்சிகள், உதாரணமாக விபச்சார வாழ்க்கை, இவர் கர்த்தரால் ஊழியத்திற்கு ஏற்படுத்தப்பட்டவராக இருக்க முடியுமா என்ற சிந்தனையை என் உள்ளத்தில் கொண்டு வந்தது. முடியாது என்று உறுதி கொண்டேன்.

14. நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தபின், அக்கினி ஸ்தம்பம் என்று கூறிக் கொண்டு அந்நிய அக்கினியை ஜனங்கள் முன் வைத்து, விசுவாசிகளை வஞ்சித்தார். அதைக் கொண்டு பணம் சம்பாதித்தார். நிச்சயமாக இது பிசாசின் ஊழியமே என்று உறுதிகொண்டேன். இது குறித்து பல செய்தி தொகுப்புகள் எழுதி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை கொண்டுவர கர்த்தர் பலத்தை கொடுத்தார். அதன் பலனாக அநேகருடைய கண்கள் திறக்கப்பட்டது. தற்பொழுது அதற்கு முற்றிலுமாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் என மும்பையிலுள்ள பலர் என்னிடம் தொடர்பு கொண்டு சாட்சி கூறினார்கள். கர்த்தருக்கு நன்றி கூறி அவரது மேலான நாமத்தை ஸ்தோத்தரித்தேன்.

15. ஆனாலும் இதுவரை **இயேசு 33** படத்தைக் கொண்டு தொழில் நடந்து கொண்டு வருகிறது என்று கேள்விப்பட்டேன். ஆதலால் தான் அது ஒரு விக்கிரகாராதனை என்று கடந்த செய்தித்தொகுப்பு ஒன்றை எழுத ஆவியானவர் வழிநடத்தினார். பரத்திலிருந்து ஞானத்தைக் கொடுத்தார். இப்படியாக அவர் ஊழியம் ஒரு தொழிலாக

மாறியது. ஆதலால் பலர் இவரை விட்டு பிரிந்தனர். பல சபைகள் மும்பையில் பல இடங்களில் உருவாகிவிட்டது. பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது.

16. யூதாஸ் எப்படிப்பட்ட ஆள் என்பதை இயேசுவை தவிர வேறு யாரும் அறியவில்லை. அவன் கள்ளக் கூட்டங்களுடன் வார்த்தைக்கு விரோதமான, பண சம்பந்தமான விவகாரங்களில் பங்கு பெற்றான். அவன் ஏமாற்றப்பட்டான். வார்த்தையின் ஒரு பாகத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு நீ சென்று கொண்டிருக்க முடியாது. வார்த்தையினுடைய எல்லாக் காரியத்தையும் நீ ஏற்றுக் கொள்ளவேண்டும். **தேவனுடைய காரியத்தில் முற்றிலுமாக நூறு சதவீதம் ஈடுபாடுகள் உடையவர்களாக அநேகர் காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் யூதாஸை போன்று இருக்கின்றனர். யூதாஸ் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் தான். சத்தியத்தில் போதிக்கப்பட்டிருந்தான். வல்லமையான ஊழியம் அவனுக்கு கொடுக்கப்பட்டது. இயேசுவின் நாமத்தினால் அவன் பிணியாளிகளை சுகப்படுத்தினான், பிசாசுகளை துரத்தினான். ஆனாலும் அவன் முடிவில் தோற்றுபோனான். ஏனென்றால் அவன் தொடக்க முதல் ஒரு கேட்டின் மகனாக இருந்தான். இன்றும் பலர் அவ்விதமாகவே காணப்படுகின்றனர்.**

17. நான் சகோ. டேனியேல் கிறிஸ்டியானை விட்டு பிரிந்த பின் கர்த்தருடைய கிருபையினால் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்தேன். ஒரு நேரம் மட்டும் ஒரு கிளாஸ் திராட்சை ரசம் பருகி வந்தேன். மற்றபடி ஆகாரம் எதுவும் கிடையாது. கர்த்தர் பெலப்படுத்தினார். கர்த்தரை மட்டும் சார்ந்து, தனியாக ஊழியம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி செய்ய ஆரம்பித்தேன். ஊழியத்தின் பாதையில் திருவைகுண்டம் வந்து குடியேறினேன். தொடர்ந்து **இயேசுவே வாரும்** பத்திரிக்கை ஊழியத்தை நடத்தினேன். ஊழியத்தின் பாதையில் செலவுகள், என் குடும்ப செலவின் ஒரு பாகமாகவே அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, கோவா, மத்திய பிரதேசம், மகராஷ்டிரா, மற்றும் பீகார் போன்ற இடங்களுக்கு ஊழியத்தின் பாதையில் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆங்காங்கு உள்ள சபைகளை உற்சாகப்படுத்தி வந்தேன். **சபைகள் பெருகப்பெருக குழப்பங்கள் பெருகின. மாறுபாடான உபதேசங்கள் தலையெடுத்து ஆடியது. இவையெல்லாவற்றிற்கும் காரணம் கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சபைகளில் பெருகியதே ஆகும்.** இதனால் ஆங்காங்கு சபைகளில் ஒருமனம் குறைவுபட்டது, ஒற்றுமை சீர்குலைந்தது, ஐக்கியம் சிதைந்தது. எங்கும் மாயையான சகோதர சிநேகமே காணப்பட்டது. ஆதலால் வெளியிடங்களுக்கு செல்லுவதை குறைத்து கொண்டேன். தமிழ்நாடு மட்டுமே ஊழியத்திற்காக போதும் என்ற எண்ணம் மனதில் எழுந்தது. ஆனாலும் ஊழியத்தின் பாதையில் என் நிலையை நான் அறியேன், தேவன் அறிவார். எனது 57 வயது வரை கடினமாக உழைத்தேன். அதன் பலனை கொண்டு குடும்பத்தை நடத்தினேன், ஊழியம் செய்தேன். அதன் பின் இன்று வரை எனது இரு பையன்களின் கைகளின் பிரயாசத்தை கர்த்தர் ஆசிர்வதிப்பதைக் கொண்டு குடும்பத்தை போஷித்து, கர்த்தர் கொடுத்த ஊழியத்தை செய்து வருகிறேன். இந்நாட்களில் எனக்கென்று கைகளின் பிரயாசம் எதுவுமில்லை. ஆதலால் வருமானம் இல்லை. ஆனாலும் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும், உயர்ந்திருக்கவும் கற்றுக் கொண்டேன். கர்த்தருடைய கிருபை எனக்குப் போதும்.

18. மும்பையில் உள்ள என் சொந்த வீட்டை 1982–83 ல் விற்று, திருவைகுண்டம் வந்து அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு வீட்டை வாங்கி குடியேறினேன், ஊழியத்தை ஆரம்பித்தேன். நான் இன்று வரை என் ஊழியத்தின் பாதையில், அதாவது கடந்த 28 ஆண்டுகளாக பணம் சம்பாதித்து அதாவது கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொண்டு, சபைக்குரிய காணிக்கைகளைக் கொண்டு, சகோதரர்களுடைய உதவிகளைக் கொண்டு எனக்கென்று, என் மனைவிக்கென்று, என் பிள்ளைகளுக்கென்று ஒரு அடி நிலம் வாங்கியது இல்லை. மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் கூறிக் கொண்டு ஊழியத்தின் பாதையில் ஒரு குடிசையோ, ஒரு வீட்டையோ, ஒரு மாடமாளிகையையே கட்டியதும் கிடையாது, வாங்கியதும் கிடையாது என்பதற்கு தேவன் சாட்சியாய் இருக்கிறார். அவருடைய சாட்சி மட்டுமே மெய்யானது. அடுத்து அத்துடன் எனது மனசாட்சியும் மற்றொரு சாட்சியாக இருக்கிறது. ஆதலால் இந்த ஊழியத்தை எவரும் அசட்டைப் பண்ண கர்த்தர் ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டார். இன்று எனது வீடு பிள்ளைகளின் படிப்பு, மற்றும் தொழிலுக்கென்று பெற்ற கடனினால் வங்கிகளின் பிடியில் இருக்கிறது. அதை மீட்க பல லட்சங்கள் தேவை. ஆதலால் கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிட்டு மனநிறைவுடன் உட்கார்ந்து இருக்கிறேன். கர்த்தருடைய சித்தம் எதுவோ அது நடக்கும். வங்கிகள் உன் வீடு ஏலம், ஏலம் என என்னை மிரட்டிக் கொண்டே இருக்கிறார்கள். துர்ச்செய்தியை கேட்கிறதினால் நான் பயப்படேன். என் இருதயம் கர்த்தரை நம்பி திடனாக இருக்கிறது. ஆதலால் நானோ என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு, எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். நிச்சயமாக வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். ஆமென்! இந்த நெருக்கடியிலிருந்து நான் மீள, எனக்கு மனுஷர்களின் கண்களில் தயவு கிடைக்க, பரத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வர நீங்களும் என் பிரச்சனைகளுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

19. இப்பொழுது கர்த்தர் எனக்காக நியமித்த காலம் வரை, அதாவது அவருடைய வருகையின் பரியந்தம், என் ஓட்டத்தை தொடர்ந்து நான் ஓடிக் கொண்டிருக்க, அதுவரை என் ஊழியத்தை உண்மையும் உத்தமுமாக செய்ய, என் குடும்பத்தினருக்காக அனுதினமும் உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள். பற்பல சபைகளில் உள்ள அநேக தேவனுடைய பிள்ளைகள் எங்களுக்காக ஊக்கமாக தங்கள் தினசரி ஜெபங்களில் ஜெபித்து வருகிறார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன். ஆம், உங்கள் ஜெபமே எங்களது ஜெயம்.

20. இந்த சிறு சாட்சி நீங்கள் என்னையும், என் ஊழியத்தையும் அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள சற்று உதவியாக இருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை இரக்கம், சந்தோஷம் மற்றும் சமாதானம் உங்கள் அனைவரோடும் கர்த்தருடைய வருகை பரியந்தம் நிலைத்திருப்பதாக. ஆமென்!

## உங்கள் ஜெபமே, எங்களது ஜெயம்

ஆவியானவர் என் உள்ளத்தில் வைத்த ஒரு ஏவுதலின்படியும், நீண்ட காலமாக சிலர் என்னிடம் சகோ. பிரன்காம் ஊழியத்தின் பாதையில் ஒளி மற்றும் அக்கினிஸ்தம்பம் தோன்றியதாக வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்களில் சில

சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது. ஆதலால் அது குறித்து ஒரு விளக்கம் கேட்டதற்கு ஒரு தெளிவான விளக்கவுரை எழுத ஆரம்பித்துள்ளேன். இதற்கான ஞானம் பரத்திலிருந்து மட்டுமே வர வேண்டும். என்னில் நான் ஒன்றுமேயில்லை. இதற்கு குறைந்தது 3 முதல் 4 மாதக்காலங்கள் ஆகும். ஏனெனில் சில ஆங்கில மொழிப்பெயர்ப்புக்கு சில ஆவிக்குரிய சகோதரர்களை நாட வேண்டியது இருக்கிறது. VOGR ஐ மொழிப்பெயர்ப்பு உதவிக்கு நாடினேன். அவர்கள் உதவி செய்ய முடியாது என மறுத்து விட்டார்கள். மேலும் இந்த விளக்கவுரைக்கான மிகவும் அத்தியாவசியமான சில விவரங்கள் VOGR அமெரிக்கா, VOGR சென்னை, மற்றும் WBGNS க்கு எழுதி கேட்டேன். அமெரிக்காவிலிருந்து பதிலே இல்லை. அதன் சென்னை அலுவலகம் தேவையான விவரங்களை கொடுக்க முடியவில்லை. WBGNS மிகக்குறைவான சில விவரங்கள் கொடுத்தார்கள். ஆக தேவையான விவரங்கள் கொடுத்தவர்களுக்கும், கொடுக்க முடியாதவர்களுக்கும் எனது நன்றி. ஆனால் சத்திய ஆவியானவர் இது விஷயமாக என்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்லுகிறார் என்ற உறுதியுடன், ஒரு மன நிறைவுடன் என் பேனாவை நகர்த்தி வருகிறேன். தவறு எங்கும் நடந்து விட கூடாது. ஒரு முறை சிறிய தவறு ஒன்றை செய்து விட்டேன். அதை VOGR சகோ. பிரபு சுட்டிக் காட்டினார். அந்த தவறுக்கு நான் மிகவும் வருந்தினேன். மீண்டும் அப்படி ஒரு தவறு நடந்து விடக் கூடாது. வர இருக்கின்ற இந்த செய்தித்தொகுப்பு ஒரு முக்கியமான பொருளைப் பற்றியதாதலால் இதற்காக ஊக்கமாக ஜெபித்துக் கொள்ளுங்கள். நன்றி!

## சென்னை குன்றத்தூரில் ஆராதனைக்கென்று ஒரு இடம்

நான் சென்னை வந்த பிறகு குன்றத்தூரில் நமக்கு ஆராதனைக்கென்று ஒரு இடம் பார்க்கும்படி சகோ. டேனியேலை (கோவூர்) கேட்டுக்கொண்டேன். தொடக்கத்தில் அக்கறை காட்டியவர் பின் அவருடைய குடும்ப பிரச்சனைகளின் நிமித்தமாக அதைக் கைவிட்டார். குன்றத்தூரில் ஆராதனைக்கு ஒரு இடம் கிடைத்தால் பூந்தமல்லி, போரூர், சோமங்கலம், அனகாபுத்தூர் போன்ற பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் வந்து ஒன்று கூட குன்றத்தூர் ஒரு மத்திய பகுதியாக இருக்கும் என நினைத்தேன். இதற்கென்று ஒரு பாரம் என் உள்ளத்தில் இருந்தது. சமீப நாட்களில் குன்றத்தூரில் உள்ள சகோ. ஜான் ஜோசப் எனது திருவைகுண்டம் விலாசத்திற்கு ஒரு கடிதம் எழுத, அது எனக்கு சென்னைக்கு திருப்பி அனுப்பப்பட்டது. அவருக்கு நான் சென்னை வந்தது தெரியாது. அந்த சகோதரனை **5.11.06** அன்று என் இல்லத்திற்கு அழைத்தேன். நாங்கள் அநேக ஆவிக்குரிய காரியங்களை பகிர்ந்து கொண்டோம். குன்றத்தூரில் சில குடும்பங்கள் ஆராதனைக்கு எங்கும் செல்லாமல் இருப்பது குறித்து அறிய வந்தேன். முடிவில் சகோதரரை குன்றத்தூரில் ஆராதனைக்கு ஒரு இடம் பார்க்க கேட்டுக் கொண்டேன். அவரும் தனக்கு அது குறித்து ஒரு ஏவுதல் இருப்பதாக கூறினார். ஆக, குன்றத்தூரில் ஆராதனைக்கு ஒரு இடத்தை கர்த்தர் ஆயத்தப்படுத்திக் கொடுக்கவும், சீக்கிரத்தில் அங்கு ஆராதனை ஆரம்பிக்கவும், ஜெபியுங்கள். உங்கள் ஜெபமே எங்களது ஜெயம்!!

## லேட்டஸ்ட் காட் நியூஸ்
Latest Hot News

1. நான் பிரதி மாதம் ஏதாவது ஒருநாள் மருத்துவர் சகோ. ராபர்ட் ராஜையா அவர்களை பொன்னேரி சென்று சந்தித்து எனக்கு தேவையான மருத்துவ உதவிகளை பெற்று வருவேன். இந்த வழக்கத்தின்படி **07.11.2006** அன்று டாக்டர் சகோதரர் என்னை வர கேட்டுக்கொண்டதின் பேரில் அங்கு சென்றேன். சிறிது நேரத்தில் பொன்னேரியின் சுற்றுப்புற கிராமத்தில் ஊழியம் செய்யும், நான் அதிகமாக அவரை குறித்து அறியாத பாஸ்டர் ஜேம்ஸ் வந்தார். அத்துடன் பாஸ்டர் பால் செபஸ்டியானும் வந்தார். அவரை கனம் பண்ண முந்திக்கொண்டேன். பின் அவர் சென்றுவிட்டார். அடுத்து டாக்டர் சகோதரர், பாஸ்டர் ஜேம்ஸ், பொன்னேரி சபையில் உள்ள சகோதரன் பால் அருள் ராஜ் மற்றும் நான், ஆக நாங்கள் நான்கு பேரும் பேசிக்கொண்டிருந்தோம். திடீரென பாஸ்டர் பால் செபஸ்டியான் மீண்டும் வந்தார். தீப்பொறி சிதறுவது போன்று என்னை மரியாதையற்ற, தரக்குறைவான, தாறுமாறான வார்த்தைகளால் தன் மனம் போன போக்கில் இடைவெளியில்லாமல் திட்டி தீர்த்தார். அத்தோடு அவருடைய உக்கிரகம் தனியவில்லை. எனது மனைவி, மக்களையும் காரணமின்றி வம்புக்கு இழுத்து நிந்தித்தார். நான் பொறுமையாக, மௌனமாக இருந்தேன். முடிவில் இனி நான் அவரது ஊழியத்தை குறித்து எதுவும் எழுதினால், என்னை எனது இல்லத்தில் வந்து அடிக்கப்போவதாக பயமுறுத்தி, ஒரு எச்சரிப்புக்கொடுத்தார். இதுவரை மௌனமாக இருந்த நான், இதைக் கேட்டவுடன், என் விலாசம் உங்களிடத்தில் உள்ளதா அல்லது வேண்டுமா என்று கேட்டேன். மறு பதில் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டார்.

2. அவர் சென்ற பின் பாஸ்டர் ஜேம்ஸ், சகோ.பால் அருள்ராஜ் என்னிடம் நான் பிறருடைய ஊழியத்தைக் குறித்து கண்டித்து, கண்டனம் பண்ணி எழுதுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். நான் செய்து வரும் ஊழியம் சரியல்ல எனக் கூறினார்கள். நானோ இதுக்குறித்து ஏற்கனவே ஒரு செய்தித் தொகுப்பு எழுதியுள்ளேன். அதில் நான் பிறருடைய ஊழியம் தேவனுடைய வார்த்தைக்கு மாறாக, விரோதமாக இருக்குமானால் அது தவறு என கடிந்து, கண்டனம் பண்ணி எழுதுவது தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தியின்படி சரியே, அதன் மூலம் நான் சபையை எச்சரித்து வருகிறேன். ஏனென்றால் ஒருவனுடைய தவறான ஊழியத்தினால் சபை வஞ்சிக்கப்படக்கூடாது. மேலும் நான் அவ்வாறு எழுதுவது தவறு என இதுவரை யாரும் என்னை வேதவாக்கியங்களைக் கொண்டு, இக்காலத்திற்குரிய செய்தியைக் கொண்டு கடிந்து கொள்ளவில்லை, திருத்தவில்லை என்றேன். மேலும் என் ஊழியம் தேவனுடைய வார்த்தையின்படி தவறு என யாராவது எடுத்துக்காட்டுடன் கூறினால், நான் என் தவறுகளை திருத்திக்கொள்கிறேன் என்றேன். பாஸ்டர் ஜேம்ஸ், தான் அதற்கு ஆயத்தமாக இல்லை என கூறிவிட்டார். சகோ. பால் அருள்ராஜ் தனக்கு எனது முந்திய செய்தித்தொகுப்பை அனுப்பி தரும்படி கேட்டுக்கொண்டார். அவருக்கு அனுப்பியுள்ளேன்.

3. பொதுவாக இவர்கள் எடுத்துக்கொள்ளும் வேதவாக்கியங்கள் மத்.18:15–17 வசனங்களில் அடங்கியுள்ளது. அதாவது உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றம் செய்தால், அவனிடத்தில் போய் நீயும், அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்கு செவிக்கொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகள் எல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டோருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ, அவர்களுக்கு அவன் செவிகொடாமற் போனால் அதை சபைக்கு தெரியப்படுத்து; சபைக்கு செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அந்நியனைப் போலவும், ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக.

4. பிரியமானவர்களே, இந்த வசனங்களை சற்று ஆழமாக தியானித்துப்பாருங்கள். இது சபையில் உள்ள இரு சகோதரர்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை குறித்து கூறிய அறிவுரை ஆகும். ஒரு சகோதரன், மற்றொரு சகோதரனுக்கு விரோதமாக குற்றம் செய்கிறான். உதாரணமாக **அ.** என்ற சகோதரன், **இ.** என்ற சகோரன் வீட்டில் காணாமல் போன ரூ.1000/– யை **ஆ** என்ற சகோதரன் திருடியதாக அநேகரரிடம் கூறினான். ஆதலால் **ஆ.** என்ற சகோதரன் **அ.** என்ற சகோதரினிடம் நான் **இ.** என்ற சகோதரன் வீட்டில் ரூ. 1000/– திருடியதாக சகோதரர்களிடம் கூறுகிறீர்களே அது தவறு நான் அப்படி ஒன்றும் திருடவில்லை என்று கூறி, **ஆ.** அவ்வாறு கூறினதை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறான். **அ.** முடியாது என்று கூறிவிட்டார். ஆதலால் **ஆ.** என்ற சகோதரன் சபையில் உள்ள க,கா,கி போன்ற மூன்று சகோதரர்களை கூட்டிக்கொண்டு **அ.** என்ற சகோதரனிடம் போகிறான். அவர்கள் **(க,கா,கி) அ.** என்ற சகோதரனை பார்த்து **ஆ.** என்ற சகோதரன், **இ.** என்ற சகோதரன் வீட்டில் ரூ.1000/– திருடியதாக கூறினீர்களே அதற்கு ஆதாரங்கள், சாட்சிகள் உண்டா என்று கேட்கிறார்கள். **அ.** வினால் ஆதாரங்கள் எதுவும் கொடுக்க முடியவில்லை. அதோடு மட்டும் அல்ல தான் **ஆ.** மீது கூறிய குற்றச் சாட்டுகளை திரும்பப் பெறவும், அதற்காக மனஸ்தாபம் கொள்ள விரும்பவில்லை.

5. ஆதலால் **ஆ,க,கா,கி** யாவரும் **அ,ஆ** மீது கூறிய குற்றச்சாட்டை நிரூபிக்க தவறிவிட்டார். மேலும் அதற்காக மனஸ்தாபப்படவும் மறுத்துவிட்டார் என சென்று சபையிடம் முறையிடுகிறார்கள். சபையில் பாஸ்டர் மற்றும் மூப்பர்கள் விபரம் **அ.** விடம் கேட்க, **அ.** சபையிலும் **ஆ.**மீது கூறிய குற்றசாட்டை நிரூபிக்க முடியவில்லை. அதற்காக மனஸ்தாபப்படவும் முன்வரவில்லை. இதனால் **அ, ஆ** வுக்கு அஞ்ஞானியைப் போலவும், ஆயக்காரனைப் போலவும் ஆகிறார். அவர்களுக்குள் இருந்த சகோதரசிநேகம், உறவு முறிந்துப்போயிற்று. இதுதான் மத்.18:15–17ன் சாராம்சம்.

6. இந்த சம்பவத்தைக்கொண்டு நான் பாஸ்டர். வில்ப்ரட் மீது கூறும் குற்றச்சாட்டுகளுடன் இணைப்பது சரியல்லை, முறையல்ல. ஏனென்றால் எனக்கும், பாஸ்டர் வில்ப்ரட்க்கும் எந்த விதமான பகையும், விரோதமும் இல்லை. நான் இந்த ஜீவனுக்கு ஏற்ற குற்றச்சாட்டுக்கள் எதையும் அவர் மீது கூறவும் இல்லை. அவர் ஊழியம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் அல்ல என்றே கூறுகிறேன். அவர் தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார் எனக் கூறுகிறேன். அவரால் தேவனுடைய சபையை பக்திவிருத்தியடைய செய்ய முடியாது எனக் கூறுகிறேன். ஏனென்றால் அவர் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்து வருகிறார். ஒன்று சாத்தானுக்கு மற்றொன்று தேவனுக்கு. ஆனால் மத்.6:24 அப்படிச் செய்யக்கூடாது என்று கூறுகிறது. அதோடு மட்டுமல்ல தண்டில் சேவகம் பண்ண எழுதிக்கொடுத்தவன், அதாவது கர்த்தருக்கு ஊழியம் செய்ய அவரால் அழைக்கப்பட்டவன், ஏற்படுத்தப்பட்டவன் பிழைப்புகடுத்த அலுவலல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான் என பவுல், தீமோத்தேயுவுக்கு ஆலோசனைக் கூறுகிறான். 2தீமோ.2:4.

7. இதன் அடிப்படையில், சாத்தான் இந்த உலகத்தை அரசாளுகிறான். இந்த உலகம் பொல்லாகங்கனுக்குள் கிடக்கிறது. இந்த உலகமும், இதன் ஆட்சியும் சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரசாங்கத்தில் மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பாஸ்டர் வில்ப்ரட் மற்றும் இவரைப் போன்றவர்கள் நிச்சயமாக தேவனால் எற்படுத்தப்பட்ட, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் பாஸ்டராக ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் இல்லை என வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்துகிறேன். வானமும் பூமியும் ஒழிந்து போகும், ஆனால் தேவனுடைய வார்த்தையோ ஒருக்காலும் ஒழிந்து போகாது.

8. சபையில் விசுவாசி, அவிசுவாசி, பாவனை விசுவாசிகள் உண்டு. நிச்சயமாக விசுவாசிகள் அந்த சபையில் இருப்பார்களானால் அவர்கள் நான் எழுதியதை தியானிப்பார்கள், அவரை விட்டு விலகுவார்கள். அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளும் அவரை ஒட்டிக் கொள்வார்கள். ஏனென்றால் அவர்களுக்கு தேவனுடைய வார்த்தை மீது தாகம் இல்லை, நாட்டம் இல்லை. காரணம் அவர்கள் மறுபிறப்பு அடையவில்லை.

9. இப்பொழுது என்னுடைய குற்றச்சாட்டை நீங்கள் இரு சாட்சிகளைக் கொண்டு விசாரிக்க முடியுமா? அல்லது நீங்கள் சார்ந்திருக்கும் சபையைக் கொண்டு தான் விசாரிக்க முடியுமா? முடியாது, ஒருக்காலும் நீங்கள் அதை செய்ய முடியாது. தேவனுடைய வார்த்தையை கொண்டு மாத்திரமே நீங்கள் என் குற்றச்சாட்டை விசாரிக்க முடியும். அது தான் நியாயம், மற்றவை யாவும் அநியாயம்.

10. ஐந்துவகை ஊழியத்தில் உள்ள ஒருவர் தேவனுடைய சபைக்கடுத்த ஆசாரியன். ஆசாரியன் எக்காரணத்தைக் கொண்டும் தேவனுடைய பணிக்கு அடுத்த மற்றொரு உலக பிராகாரமான பணியில் ஈடுபடக்கூடாது. ஆசாரியன் உலகப்பிரகாரமான ஒரு பணியில் ஈடுபட்டதாக வேதவாக்கியங்களைக் கொண்டு சகோ. அருள்ராஜ் மற்றும் பாஸ்டர் ஜேம்ஸ் நிரூபிக்க முடியுமா? நீங்கள் அவ்வாறு நிரூபித்துவிட்டால் நான் ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள் என ஒத்துக் கொள்கிறேன். வாருங்கள், எனவே இந்த சவாலை இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து வரும் உங்களில் யாராவது ஏற்றுக்கொள்வீர்களா? கர்த்தருக்குரிய தசமபாகத்திற்கும், காணிக்கைகளுக்கும் பழைய ஏற்பாடு ஆசாரியத்துவம். பணிவிடைகளுக்கும் மற்றும் ஊழியங்களுக்கும் அந்த ஆசாரியத்துவம் பொருந்தாதா? தசமபாகத்திற்கும், காணிக்கைகளுக்கும் பழைய ஏற்பாடு ஆசாரியத்துவம் பொருந்தும் என்றால் உங்கள் ஊழியத்துக்கும், ஐந்துவகை ஊழியத்துக்கும் இந்த ஆசாரியத்துவம் நிச்சயமாக பொருந்தும். ஆசாரியர்கள் தேவனுடைய ஆலயத்துக்கடுத்த பணிவிடையன்றி வேறு எந்த பணியும் செய்யக் கூடாது. அதே போன்று தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய, கர்த்தருக்குரிய தசமபாகத்திற்கு தகுதியுடைய ஒருவன் வேறு எந்த பணியும் செய்ய கூடாது, முடியாது.

11. ஒரு நபர் நிரந்தரமான ஒரு தொழிலை செய்து கொண்டு ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தை செய்ய முடியாது. பவுல் கூடாரம் செய்யும் தொழில் செய்தான். ஆனால் அது ஒரு நிரந்தரமான தொழிலாக அல்ல. தற்காலிகமாகவே அது செய்து வந்தான். அதுவும் தன் ஊழியத்தின் தேவைக்காக, வாங்குதலை பார்க்கிலும் கொடுக்கிறதே நலம் என்ற இயேசுவின் வார்த்தையை நினைவுக் கூர்ந்து அப்படி செய்தான். ஆதலால் பவுல் தொழில் செய்து ஊழியம் செய்தான். அதன் படி நானும் செய்கிறேன் எனக் கூறி ஒரு முழுநேரத் தொழில், ஒரு நிரந்தரமான தொழில் செய்து கொண்டு, தேவனுடைய சபை பக்திவிருத்திக்கான ஊழியம் செய்வது தேவ சித்தத்திற்கு, தேவனுடைய வார்த்தைக்கு புறம்பானது.

**12. முடிவாக இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும் ஒருவர் தேவனுடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஊழியக்காரன் அல்ல. அல்லவே அல்ல. நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும் ஒருவன் தேவனுடைய மந்தையை வழிநடத்த முடியாது, முடியவே முடியாது.**

13. நீங்கள் கூறலாம், எங்கள் சபை ஒரு தமிழ் செய்தியை மறுபடியும் பிரிண்ட் செய்ய ஆகும் செலவு ரூ. 17,000/– ஏற்றுள்ளது. எங்களது சபை ஏழு முத்திரையை பஞ்சாபி மொழியில் வெளியிட ரூ.1,00,000/– செலவு செய்துள்ளது, அது கூடிய சீக்கிரத்தில் வெளிவரப்போகிறது. என பெருமை பாராட்டிக் கொள்ளலாம். இதில் அரசு பணியில் ரூ.25,000/– சம்பளம் வாங்கும் எங்களது சபை பாஸ்டர் வில்ப்ரட் பண உதவி செய்திருக்கிறார். அவர் அரசு பணியிலில்லாவிட்டால் இப்படி தேவனுடைய ஊழியத்தை தாங்க முடியுமா என்று கூறலாம். நண்பர்களே! மகதலேனாள் எனப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்தியினால் இயேசுவுக்கு ஊழியம் செய்து வந்தார்கள் என லூக்.8:2,3 வசனங்களில் தியானிக்கிறோம். அப்படியானால் இந்த ஸ்திரீகளும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களா? கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரிகளா? தங்கள் ஆஸ்திகளினால் தேவனுடைய ஊழியத்தை தாங்குவது வேறு, தேவனுடைய சரீரமாகிய சபையை பக்தி விருத்தியடைய செய்ய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியம் வேறு. ஒருவன் ஊழியத்துக்கு செய்யும் உதவி அவனை தேவனுடைய சபையின் ஊழியக்காரனாக்காது.

14. பாஸ்டர் பால் செபஸ்டியான் எனக்கு மிக்க நெருக்கமான ஒரு சகோதரன். இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள பிள்ளைகளுக்கு திருமணத்திற்காக ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறார். அதாவது ஆபிரகாமின் ஊழியக்காரனாகிய எலியேசரின் ஊழியத்தை செய்து வருகிறார். இது ஒரு நல்ல பணி தான். நான் அதை குறை கூற வில்லை. இந்த சேவைக்காக அவர் பல ஊர்கள் சென்று வரன்களை பார்த்து வந்து ஏற்பாடுகள் செய்துக் கொடுக்கிறார். ஆனால் அதே வேளையில் தன்னை பாஸ்டர் என அழைத்துக் கொள்ளுகிறார். அங்கு தான் பிரச்சனையே எழும்புகிறது. தன் பெயருக்கு முன் அவர் போடும் பாஸ்டர் என்ற பட்டத்தை எடுத்து விட்டு, இந்த சேவையை அவர் செய்து வந்தால் அது நலமாய் இருக்கும். இன்று அவர் செய்யும் திருமணச் சேவை ஒரு பாஸ்டரது பணி அல்ல. ஒரு பாஸ்டர் தன் மந்தையை விட்டு எக்காரணத்தை கொண்டும் ஊர் சுற்றக் கூடாது. பாஸ்டர் பால் செபஸ்டியானுக்கென்று ஒரு சபை, மந்தை எதுவும் கிடையாது. பெயரளவுக்கு நான்கு, ஐந்து பேர்களை வைத்துக்கொண்டு, அதன்பேரில் பாஸ்டர் என்ற பதவியை தனக்கு வைத்துக்கொண்டு ஊர்வலம் வந்து செல்வது அந்த பணியை தூஷிப்பது ஆகும். ஆதலால் இவருக்கும் என் ஆவிக்குரிய ஆலோசனை என்னவென்றால் உங்கள் திருமண புரோக்கர் தொழிலை நான் குற்றப்படுத்த வில்லை. அதைச் செய்து வாருங்கள். அது உங்கள் விருப்பு, வெறுப்பு. அதில் நான் தலையிட விரும்பவில்லை. அதில் எனக்கு உரிமையும் இல்லை.

15. ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பக்திவிருத்திக்குரிய பாஸ்டர் உத்தியோகத்தை தூஷிக்காதீர்கள். அதற்கு களங்கம் கொண்டுவராதீர்கள். நான் ஒரு பாஸ்டர் எனக் கூறிக்கொண்டு திருமண புரோக்கர் தொழிலை செய்வதை விட்டு விடுங்கள். நான் இக்காலத்துக்குரிய செய்தி மக்கள் மத்தியில் ஒரு திருமண புரோக்கர் என விளம்பர படுத்தி, அந்த தொழிலை நேர்மையாக செய்யுங்கள். நீங்கள் செல்லும் இடங்களில் தேவத்துவம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் போன்ற நலமான இரட்சிப்புக்கடுத்த காரியங்களை பேசி மக்களை சத்தியத்திற்குள் வழிநடத்துங்கள். சத்தியத்திற்குச் சாட்சியாக ஜீவியுங்கள். கர்த்தருடைய சுவிஷேசத்தை அறிவிப்பது அனைவர் மேலும் விழுந்த கடமை. திருமண புரோக்கர் தொழிலைக் கொண்டு பாஸ்டர் ஊழியத்தை உங்களுடன் தக்கவைத்து கொள்ளாதீர்கள். பாஸ்டர் ஊழியம் வேறு. திருமணம் புரோக்கர் தொழில் வேறு. தொழிலையும் ஊழியத்தையும் ஒன்றோடு ஒன்று இணைக்காதீர்கள். இரண்டையும் ஒன்றாக இணைத்து ஊழியத்தை உதாசீனப்படுத்தி, அதற்கு களங்கம் விளைவிக்காதீர்கள். இதுவே எனது ஆவிக்குரிய ஆலோசனை உங்களுக்கு.

16. நீங்கள் என்னை தாறுமாறாக திட்டியதினால், என்னை அடிப்பேன் என்று மிரட்டி எச்சரித்ததினால் எனக்கு ஒன்றும் வருத்தமில்லை. ஏனென்றால் தேவனுடைய மனுஷர்கள் அன்றும், இன்றும், என்றும் அப்படிப்பட்ட மிரட்டல்களை சந்தித்து தான் வருகிறார்கள். அது ஊழியத்தின் பாதையில் சகஜம். அதை கர்த்தர் அனுமதிக்கிறார். ஆதலால் நீங்கள் உங்கள் வழியை என் ஆலோசனைகளின்படி திருத்திக் கொண்டால் அது உங்களுக்கும், தேவனுடைய சபைக்கும் நலமாக இருக்கும். தேவனுடைய சபைக்கடுத்த உக்கிராணப் பொறுப்பு எனக்கு உண்டு. ஒருவரால் தேவனுடைய சபை பாதிக்கப்படும்போது நான் அங்கு நிச்சயமாக ஈடுபட, இடைபட வேண்டும். அது குறித்து மக்களை எச்சரிக்க வேண்டியது இருக்கிறது. ஆக நான் என் பணியை செய்து வருகிறேன். கர்த்தர் பெலப்படுத்தி, பயன்படுத்தி வருகிறார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவின் அன்பில்

**சகோ. காலேப் யோசுவா**